12 பக்கங்கள் — விலை 50 காசு

# நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 2—4—1978 | இதழ் 29

# மகாராஜா கூட்டிய மந்திராலோசனை மண்டபம்!



## கலைஞர் கடிதம்

உடன்பிறப்பே,

இராமாபுரம் சமஸ்தானத்தில் அன்று கொலு மண்டபம் கூடுவதற்குப் பதிலாக மந்திராலோசனை மன்றம் கூடிற்று. மன்றத்தின் நடுவில் போடப்பட்டிருந்த தங்கச் சிம்மாசனத்தில் மகாராஜா வீற்றிருந்தார், வயது முதிர்ந்து அடர்ந்த மீசை நரைத்துப் பழுத்த நிலையில் இருந்த மகாராஜா முன்னிலையில் ஒரு வரிசையில் மந்திரிமார்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு எதிர் வரிசையில் அமர்ந்திருந்தவர்களில் நாலைந்து துடிப்பான வாலிபர்கள் தோளைக் குலுக்கி மீசையை முறுக்கியவண்ணம், மந்திரிமார்களைப் பார்த்துக் கேள்விகளைப் பொழிந்து கொண்டிருந்தனர்.

"மகாராஜா அவர்களே! நமது மந்திரிமார்கள்— அதிலும் குறிப்பாக நமது பிரதான மந்திரியார் அவர்கள் ஊருக்கு உபதேசம் செய்வதில் கெட்டிக்காரராக இருக்கிறார். நமது பிரஜைகள் யாரும் தவறான வழியில் பொருள் திரட்டக் கூடாது என்றும், நமது சமஸ்தானத்துக்குச் சேரவேண்டிய வரிப் பணத்தை ஏமாற்றி வாயில் போட்டுக் கொள்ளக் கூடாது என்றும் சட்டம் இருப்பதைச்சுட்டிக்காட்டுகிறார். அந்தச்சட்டங்கள் கடுமையாக்கப்படும் என்றும் அடிக்கடி எச்சரிக்கிறார். ஆனால் நமது பிரதான மந்திரியாரே கோடிக் கணக்கான ரூபாய்களை இந்த சமஸ்தானத்தைப் பொறுத்து வரி ஏய்ப்பின் மூலமும், தவறான வழியிலும் சம்பாதித்துத் தன் சொந்த உபயோகத்திற்கு வைத்துக் கொண்டிருக்கிறார். இது எங்கள் குற்றச்சாட்டு,"

இவ்வாறு அந்த வாலிபர்கள் குற்றம் சாட்டியதும் பிரதானமந்திரி எழுந்து விடையளித்தார்.

"மகாராஜா அவர்களே! நான் வரி ஏய்ப்பின்மூலம் பொருள் குவித்தது உண்மை! ஆனால், அந்தப் பொருளைப் பலருக்கு நன்கொடையாக வழங்கியிருக்கிறேன்."

இந்தப் பதிலைக் கேட்டதும் வாலிபர்கள் விடவில்லை. எழுந்து மடக்கினார்கள்.

"மகாராஜா! மந்திரியார் கூற்று கேலிக்குரியது! வரியை ஏய்த்து, தவறான முறையில் பணம் சேர்ப்போர் அனைவருமே தானதர்மம் செய்துகொண்டுதானிருக்கிறார்கள். அதற்காகச் சட்டம், அவர்களை விட்டுவிடுகிறதா? வழிப்பறி செய்து கொள்ளையடிக்கிற கள்வர் தலைவன் கூடத் தன்னிடமுள்ள பொருளை ஏழை எளியோர்க்கு வழங்குவதாகச் சொன்னால், சட்டம் அவனைக் கொள்ளையடிப்பதற்கு அனுமதித்துவிடுகிறதா? நமது பிரதான மந்திரி தவறான முறையில் சமஸ்தானத்து வரியைஏமாற்றிச்சேர்த்த தொகை அதிகம். அதில் ஏதோ நாலு தர்மங்களை விளம்பரத்தோடு செய்துவிட்டு மீதியைச்சுருட்டிக் கொண்டிருக்கிறார் என்பதே எங்கள் குற்றச்சாட்டு!"

பிரதான மந்திரியார் மீண்டும் விளக்கமளித்தார்.

"மகாராஜா! என்னை மன்னித்துவிடுங்கள், நான் தவறான வழியில் பொருள் ஈட்டினேன். நமது சமஸ்தானச் சட்டத்திற்கு விரோதமாக வரி ஏய்ப்புச் செய்தேன். அனைத்தையும் நமது இந்திரபுரிப் பேரரசியாரிடம் நானே ஒத்துக்கொண்டு அவர்களது மன்னிப்பையும் பெற்று, அந்தமன்னிப்புக் கடிதத்தையும் தங்களிடம் சமர்ப்பித்திருக்கிறேன். இனிமேல் அப்படித் தவறு செய்யமாட்டேன். திருந்திவிட்டேன். இந்திரபுரிப் பேரரசியார் அவர்களே மன்னித்து எச்சரித்துவிட்ட பிறகு இந்தப் பிரச்சினையை அடிக்கடி எழுப்புவதில் அர்த்தமேயில்லை."

வாலிப வீரர்கள் மந்திரியாரின் பேச்சைக் கரகோஷம் செய்து வரவேற்று;

"இவ்வளவு பெரிய தவறுக்குச் சொந்தக்காரராகிய தாங்கள், மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும்போது உங்கள் மனச்சாட்சியே உங்களைக் குடையவில்லையா?" என்று கேட்டனர்.

இதுவரையில் பேசாமலிருந்த மகாராஜா, தனது அடர்ந்து தழைத்த நரைத்த மீசையைத் தடவிக்கொண்டே பின்வருமாறு சொன்னார்.

"ஏதோ நடந்தது நடந்துவிட்டது. இதை இத்துடன் விட்டுவிடுவோம். பிரதான மந்திரியார், தவறான முறையில் பணம் சம்பாதித்ததைப் பற்றி பேசிய பேச்சுக்கள், கொடுத்த விளக்கங்கள், அதுபற்றிய விவாதங்கள் அனைத்தையும் நமது மந்திராலோசனை நடவடிக்கைச் சுவடியில் எழுத வேண்டாமென்று உத்திரவிடுகிறேன்."

இந்த உத்திரவைக் கேட்டு, சுவடி எழுத்தர் அயர்ந்து போனார். இந்த விவகாரம் வெளியே தெரிவதும் விளம்பரமாவதும் இன்றல்ல; எதிர்காலத்திலே கூட, கூடாது என்பதற்காகவே அவைச் சுவடியிலிருந்து அவற்றை அகற்றுமாறு மகாராஜா உத்திரவிட்டுவிட்டார்.

ஆனால், மந்திராலோசனைச் சபைக்கு வந்தவர்களையெல்லாம் ஊமையாக்கிவிட முடியுமா என்ன?

அவர்கள், பிரதான மந்திரியாரின் உண்மை உருவத்தை உலகிற்குச் சொல்லிக் கொண்டுதானிருப்பார்கள். அவர்களில் ஒரு சிலர் வெளியே சொல்லாவிட்டாலும் அவர்களது நினைவில் வைத்துக்கொண்டுதானேயிருப்பார்கள்!

உடன்பிறப்பே! என்ன; நான் எழுதியிருப்பது ஒன்றும் புரியவில்லையா? முன்னொரு காலத்தில் ஒரு சமஸ்தானத்து மந்திராலோசனை மன்றத்தில் நடந்த நிகழ்ச்சி இது! புரியாவிட்டால் புரிந்தவர்களைக் கேட்டுப் புரிந்துகொள்க!

# புரிந்தவர்களைக் கேட்டுப் புரிந்து கொள்க!

# இரங்கற் கூட்டத்திலுமா இறுமாப்புக் காட்டவேண்டும்?

நம்மைவிட்டு மறைந்த அன்னை மணியம்மையாருக்கு, 28—3—78 நாளன்று சென்னைக் கடற்கரை சீரணி அரங்கில் ஓர் இரங்கற் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர் திராவிடர் கழகத்துத் தோழர்கள்.

அனைத்துக் கட்சிகளின் சார்பாகவும் அறிவும் அனுபவமும் வாய்ந்த சான்றோர்கள் அக்கூட்டத்தில் பங்கேற்று, அன்னை மணியம்மையாரையும், அவருடைய சமுதாயப் பணிகளையும் நினைவு கூர்ந்தனர்.

ஓயாது இரைச்சலிடும் கடலலைகள் கரையை மோதி மோதித் திரும்புவதுபோல்— கடலலைகளெனத் திரண்டிருந்த மக்களின் நினைவலைகளும் அன்னை மணியம்மையாரின் கடந்தகால வாழ்க்கைச் சரித்திரத்தின்மீது பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தன.

திரு முத்தையா (செட்டியார்), திரு. பக்தவத்சலனார்; திரு. அம்பிகாபதி, திரு. அப்துல் லத்தீப் — போன்ற பிற கட்சித் தலைவர்கள் மணியம்மையாரை நினைவுகூர்ந்து, அவர் விட்டுச் சென்ற பணியை நாம் தொடர்ந்து நடத்திச் செல்ல வேண்டும் எனச் சொல்லி முடித்த பிறகு கலைஞர் பேசத் துவங்கினார்.

அன்னை மணியம்மையாரை நினைவு கூரும்போதே திராவிட இயக்கத்தின் தோற்றம் — வளர்ச்சி — எதிர்கால முன்னேற்றம் குறித்து கலைஞர் அழகு தமிழில் உள்ளத்தைத் தொடும்படி உரையாடியதை மக்கள் தம்மை மறந்து கேட்டுக் கொண்டிருந்தனர்.

திரண்டிருந்த எண்ணற்ற மக்கள் அமைதி காத்து அமர்ந்திருக்கவே கடலலைகளின் இரைச்சல் இன்னும் தெளிவாகக் கேட்டது......

இருந்தாற்போலிருந்து — கூட்டத்தில் திடீரென் 'சலசலப்பு' எழுகிறது

"வாத்தியார் வந்துட்டாருடோய்...வாத்தியார் வந்துட்டாருடோய்... உப் ... உப் ..."

—ஒரே கூச்சல்...கூட்டத்திடையே குழப்பம்...... விசிலொலிகள்......

ஆம்; வந்தவர் வேறு யாருமல்ல — தமிழகத்து முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன்தான்!

படப்பிடிப்புகளுக்குத் தாமதமாக வந்து தனது இறுமாப்பைக் காட்டிக் கொள்வதைப் போலவே, அன்னை மணியம்மையாரின் இரங்கற் கூட்டத்திற்கும் தாமதமாக வந்து தனது இறுமாப்பைக் காட்டிக் கொண்டார்.

ஏதோ இவருக்கு மட்டும் தவிர்க்க முடியாத வேலை இருப்பது போலவும் ... அதனு

-பழனியான்-

லேயே தாமதமாக வந்ததை மக்கள் தவறாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள் என்றும் சிலர் சமாதானம் கூறலாம்.

அப்படியென்றால்—

பிற தலைவர்கள் எல்லாம் வேலை வெட்டி எதுவும் இல்லாதவர்களா என்ன?

ஒப்பனை செய்துகொண்டு முதலமைச்சர் வெளியே கிளம்புவதற்குக் குறைந்தபட்சம் மூன்று மணி நேரமாவது ஆகும் என்பது அனைவரும் அறிந்ததே! சரி — அப்படியென்றால் அந்த ஒப்பனையை முன்னதாகவே தொடங்கி, குறிப்பிட்ட நேரத்தில் இரங்கற் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கலாமே...... எல்லாம் போகட்டும் —

அதெப்படி இவரால் சொல்லி வைத்ததுபோல கலைஞர் பேசிக்கொண்டிருக்கும் நேரம் பார்த்து, கூட்டத்தின் குறுக்கே 'ஒய்யாரக் காரில்' உலாவர முடிந்தது!

கலைஞர் பேசிக் கொண்டிருக்கையில் — முதலமைச்சர் வந்தபோது — சிறிய 'சலசலப்பு' எழுந்ததுதான்...... அணலைப் பழமென நினைத்து விரைந்து சென்று கருகி விழுந்துமடியும் விவரம் தெரியாத விட்டில்கள் ஏற்படுத்திய 'சலசல'ப்புதான் அது......

முன்னொரு சமயம் குடியரசுத் தலைவராக இருந்த திரு. இராதாகிருஷ்ணன் பேசிக் கொண்டிருந்தபோது — அவ்வழியே ஒரு நடிகை செல்ல— சில 'விசிலடிச்சான் குஞ்சுகள்' இதே மாதிரியே அப்போதும் 'சலசல'த்தன.

ஓர் இரங்கற் கூட்டத்தில் கலந்து கொள்ளும்போது கடைபிடிக்க வேண்டிய பண்புகூட அறியாத ஒரு மனிதரை அழைத்திருக்கக்கூடாது என்றும் 'பங்காரா டான்ஸ்க்கோ' அல்லது எந்த இளம் நடிகையின் பரத நாட்டிய அரங்கேற்றத்திற்கோ அழைக்கப்பட வேண்டிய மனிதரை அன்னை மணியம்மையாரின் இரங்கற் கூட்டத்திற்கு அழைத்தது பெரிய தவறு என்றும்கூட சில நடுநிலையாளர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

என்ன செய்வது?

முதலமைச்சர் பதவியிலிருக்கும் மனிதரென்று நினைத்து. மதித்து அவர் அழைக்கப்பட்டார்.

ஆனால் அவரோ முதலமைச்சர் பதவிக்குரிய மாண்பை மறந்து, 'போட்டா போட்டி'யில் ஈடுபடும் ஒரு சாதாரண நடிகராகவே நடந்துகொண்டார்.

கலைஞர் பேசி முடித்ததும், முதலமைச்சர் தன்னுடைய 'மழலை'த் தமிழ் உதிர்க்கச் 'செம்பவள வாய் திறந்தார்.

அந்தோ—

கூட்டம் கலையத்தொடங்கிவிட்டது. வந்ததே கோபம் அவருக்கு' அந்த வயிற்றெரிச்சலில் உறுமினார்:

"இது இரங்கற்கூட்டம். தனி நபர் துதிபாடும் கூட்டமல்ல" என்று.

கூட்டத்திலிருந்து குரல்கள் கிளம்பின:

"அது எங்களுக்குத் தெரியும். உங்களுக்குத்தான் தெரியவில்லை" என்று ஆம்— பாவம். அவருக்குத் தெரியவில்லைதான்! ஒரு இரங்கல் கூட்டத்தின்போது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைக் காட்டக்கூடாது என்ற நாகரிகம் அவருக்குத் தெரியவில்லைதான்.

கூட்டம் தொடர்ந்து கலைந்து கொண்டேயிருந்தது!

சிலரால் சில பதவிகள் சிறப்படைகின்றன: சிறப்பான சில பதவிகள் சிலரால் சீர்குலைகின்றன!

## பத்திரிகையாளர்கட்குப் பதவிகள்!

'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆஃப் இண்டியா' என்ற பெயர்பெற்ற ஆங்கில வார இதழின் ஆசிரியரான 'குஷ்வந்த் சிங்'கிற்குப் பதவி அளிக்க ஜனதா மேலிடம் தீர்மானித்துள்ளது

'இருண்ட காலத்தின்'போது இந்திராவுக்கும், சஞ்சய்க்கும் துதிபாடிய முக்கியமான பத்திரிகையாளர்களில் குஷ்வந்த் சிங்தும்ஒருவராவர்.

சஞ்சய்மீது அவருக்கிருக்கும் 'அன்பும், அக்கறையும்' இன்றளவும் அப்படியே இருக்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை

நான்கு இலட்சம் பிரதிகளுக்குமேல் விற்பனையாகும் ஒரு பத்திரிகையின் ஆசிரியரைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொள்ளவே ஜனதா மேலிடம் அவருக்குப் பதவி அளிக்க முன்வந்துள்ளதாகச் சிலர் கருதுகிறார்கள்.

பதவி பெறப் போகும் இன்னொரு பத்திரிகையாளர் — 'ஜட்ஜ்மெண்ட்' புகழ் குல்தீப் நய்யாராவார்!

## யார் இந்த ரஜீவ்?

புதுவை மாநிலத்தில் கீழ்நிலை எழுத்தர் வேலைக்கான தேர்வில் 'ரஜீவ்' பற்றி ஒரு கேள்வி கேட்கப்பட்டதாம்,

புதுவை சட்டமன்றத்தில் ஜனதா உறுப்பினர் டி. கே. சந்திரசேகரன் இதனைக் குறிப்பிட்டு, 'யார் இந்த ரஜீவ்?' என்று கேட்டிருக்கிறார்.

உடனே முதல்வர், தாமும் 'யார் இந்த ரஜீவ்' என்று அறிந்துகொள்ள விரும்புவதாகக் கூறினார்.

முன்னாள் தலைமையமைச்சர் இந்திராகாந்தி மீது 'விசுவாசம்' கொண்டுள்ள அதிகாரிகளால் இதுபோன்று மறைமுகமாகப் பிரச்சாரம் நடைபெறுகிறது என்று சந்திரசேகரன் கூறினார்,

இந்தத் தேர்வில் 1784 பேர் கலந்து கொண்டு எழுதியதாக மூலக்கேள்விக்குப் பதிலளிக்கையில் முதல்வர் கூறினார்.

இந்திராகாந்தியின் மூத்த மகன்தான் ரஜீவ் என்பது குறிப்பிடத்தக்கது,

# தேவைப் படுவது பணமல்ல!

: சாலை இளந்திரையன் :

சில சொற்களையும் தொடர்களையும், பொருள் தெரியாமலே சொல்லிக் கொள்வதிலும் கேட்டுக் கொள்வதிலும் இந்தியர்களாகிய நமக்குக் கடுமையான மோகம். பொருள் தெரியாத மொழிலேயே வழிபாடு செய்து பொருள் தெரியாத மொழியிலேயே சங்கீதம் கேட்டுப் பழகிவிட்டவர்கள் அல்லவா? இப்போது அதே முறையில்—குடியாட்சி, தேசிய ஒருமைப்பாடு என்பவைகளை இப்படியே பொருள் புரியாமல் மிழற்றிக் கொண்டு இருக்கிறோம். அதனாலேயே, நாடாளுமன்றம் முதல் எல்லா இடங்களிலும் நமக்குள் அடிக்கடி வாய்ச்சண்டை மூண்டு விடுகிறது; நெருக்கடி நிலைக்காரர்கள் (நாடாளுமன்றத்திலேயே) மற்றவர்களின் கழுத்தைப் பிடிக்கும் அளவுக்குப் போய்விடுகிறார்கள்!

## பழைய பல்லவி

குடியாட்சி, தேசிய ஒருமைப்பாடு என்பவைகளைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது என்டதையும், ஆட்சிக் கட்டிலில் ஏறிக்கொள்ளுகிறவர்களுக்கு இவைகளைப் பற்றி எந்த அக்கறையும் கிடையாது என்பதையும் உறுதிப்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று அடிக்கடி நமது நாடாளுமன்றத்தில் நடந்து வருகிறது.

ஒருவர் ஆங்கிலத்தில் ஒரு கேள்வி கேட்கிறார்; அமைச்சரோ குட்டி அமைச்சரோ சரசர என்று, இந்தியில் அவருக்குப் பதில் சொல்லித் தள்ளிவிடுகிறார்கள். கேள்வி கேட்ட (இந்தி தெரியாத) உறுப்பினர் ஒன்றும் புரியாமல் விழிக்கிறார்; உடனேயே அவரைச் சேர்ந்த (அல்லது பதில் சொன்ன அமைச்சரைப் பிடிக்காத) சில பேர், எழுந்து நின்று, "ஆங்கிலத்தில் கேட்பவருக்கு இந்தியில் பதில் சொல்லலாமா?" என்று குரல் எழுப்புகிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் கணிசமான ஒரு தொகையினருக்கு இந்தி தெரியாது ஆனாலும், அவர்களும் உட்கார்ந்திருக்கிற நாடாளுமன்றத்தில், ஓர் உறுப்பினரும் அமைச்சரும் இந்தியிலேயே கேள்வியும் பதிலுமாக வசனம் பேசிக்கொண்டே போகிறார்கள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த இந்தி தெரியாத உறுப்பினர்கள் முணுமுணுக்கிறார்கள்: "இங்கே இவர்கள் நாட்டு விவகாரம் பேசுகிறார்களா? அவர்களின் வீட்டுச் சொந்தச் சமாச்சாரம் பேசுகிறார்களா? நாங்களெல்லாம் இங்கே எதற்காக உட்கார்ந்திருக்கிறோம்? எங்களுக்குப் புரியாத மொழியில் இவர்கள் பேசிக்கொண்டு போனால் எப்படி?..." இப்படிப் பொறுமுகிறார்கள் அவர்கள்; அவர்களில் சில பேர் அவைத் தலைவரை நோக்கித் தங்கள் வேதனையையும் வெளிப்படுத்துகிறார்கள்.

உடனேயே மற்றோர் அமைச்சர் அல்லது தலைமை அமைச்சர் எழுகிறார்: "அமைச்சர்கள் ஆங்கிலத்திலே அல்லது இந்தியிலே பேசலாம் என்று அரசியல் சட்டம் உரிமை அளித்திருக்கிறது" என்று வலியுறுத்துகிறார். (ஏதோ அரசியல் சட்டம் மக்களுக்கு வழங்குகிற உரிமைகளை எல்லாம் இவர்கள் மக்களுக்கு மீட்டுக் கொடுத்து விட்டமாதிரி...), "ஆங்கிலத்தில் கேட்டவருக்கு இந்தியில் பதில் சொல்வதுதான் தப்பு; இந்திக் கேள்விக்கு இந்தியிலேயே பதில் சொல்வதில் எந்தத் தவறும் இல்லை" என்றும் விளக்கம் தருகிறார்.

கூடவே, "இந்தி பேசாதவர்கள்மீது இந்தியைத் திணிக்கும் எண்ணம் இல்லை; அதே போல், ஆங்கிலத்தை (இந்திக்காரர்மீது) திணிக்கும் எண்ணமும் கிடையாது!"; என்கிற பல்லவியும் பாடப்படுகிறது...

## ஒருமைப்பாடா?

மக்களின் உரிமைகளை நிலைநாட்டவும் அவர்களின் நல்வாழ்வுக்குத் திட்டம் வகுக்கவும் மக்களின் பிரதிநிதிகள் கூடியுள்ள இடமே நாடாளுமன்றம். அங்கே திணிப்புகளைப் பற்றிய பேச்சு ஏன் வந்தது? எங்கள்மீது இந்தியைத் திணிக்கிறார்கள், அல்லது எங்கள்மீது ஆங்கிலத்தைத் திணிக்கிறார்கள் என்று உறுப்பினர்கள் குரல் எழுப்பும் நிலை ஏன் ஏற்படுகிறது?

இவைகளைப் பற்றி யாரும் நிதானமாகச் சிந்திப்பதாகவே தெரியவில்லை. சிந்தித்திருந்தால், இந்தச் சண்டைகளுக்கும் அதன் காரணமாக நாட்டு மக்களின் பணமும் நேரமும் விரயமாவதற்கும் இடமே ஏற்பட்டிராது.

நமது நாடாளுமன்றத்தார், மேலே குறித்த குடியாட்சி உரிமை தேசிய ஒருமைப்பாடு என்பவைகளைப் பல சமயங்களில் மறந்துவிடுகிறார்கள் என்றே நினைக்க வேண்டியுள்ளது. நாட்டுக்குத் தேவையான எல்லாவற்றையும் (எல்லோரும்) கலந்து பேசித் திட்டங்கள் வகுப்பதற்காகவே மக்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், இவர்களோ—திருவிழாக் கூட்டத்தில் தங்கள் தங்கள் (பல ஊர்) உறவினர்களைச் சந்தித்து அவர்களிடம் மட்டும் பேசிக் கொள்ளுகிறவர்கள் போல தனித்தனிக் கும்பல் கும்பலாகவே பேசுகிறார்கள்: இங்கே பேசப்படும் ஒவ்வொரு கருத்தும் இங்குள்ள ஒவ்வொர் உறுப்பினருக்கும் தெரியவேண்டும் என்கிற குடியாட்சி மனப்பான்மையே அவர்களுக்கு உண்டாகியிருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு குறிப்பிட்ட விவகாரத்தைப் பற்றி ஓர் இந்தி உறுப்பினரும் அமைச்சரும் இந்தியிலேயே பேசிக் கொள்கிறார்கள்; அந்த விவாதத்தில் இந்தி தெரியாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலை என்ன? அதேபோல், இரண்டு பேர் ஆங்கிலத்திலேயே பேசிக் கொள்ளுகிறார்கள்; அப்போது ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்களின் நிலை என்ன? இந்த நாட்டுக் குடிமக்களும் கோடிக் கணக்கான குடிமக்களின் பிரதிநிதிகளுமான அந்த உறுப்பினர்களுக்குத் தெரியாமலே தான் நாடாளுமன்றத்தில் விவகாரங்கள் நடைபெற வேண்டுமா?

இப்படி, நாடாளுமன்றம் வரையில் — ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியாதவிதமாகவே (புரியாத ஒரு மொழியிலேயே) நாம் செயலாற்றிக் கொண்டு இருந்தால், எல்லோரும் நாட்டுப் பிரச்சினைகளில் அக்கறை கொள்ளுவது எப்படி? இந்த நாட்டு மக்களிடையெ (தேசிய) ஒருமைப்பாடு ஏற்படுவதுதான் எப்படி?

## இங்கே வருவானேன்?

நாடாளுமன்றக் கூட்டங்கள் நடைபெறும் போது ஒரு நாளைக்குப் பல லட்ச ரூபாய் செலவாகிறது; ஏன், ஒரே ஒரு மணி நேரத்துக்கே பல ஆயிரம் ரூபாய் செலவாகிறது. இவ்வளவு பெரிய (தேசியச்) செலவில் நடைபெறும் நமது நாடாளுமன்றக் கூட்டம், திட்டமில்லாத திருவிழாக் கூட்டம்போல நடைபெறலாமா? அல்லது ஏற்கனவே அறிமுகமானவர்களே சிறு சிறு கும்பல்களாகக் கலந்து, ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுகிற அயல்நாட்டுத் தூதரக விருந்துகள் போல நடைபெறலாமா? அங்கே, எல்லோரும் கலந்து பேசி முடிவுகளை மேற்கொள்ளுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டாமா?

"மாமியார் திட்டினாலும் மருமகள் திட்டினாலும் அரிசி வெளுக்க வேண்டும்" என்பது பழமொழி. நாடாளுமன்ற நடைமுறைகளைப் பொறுத்த வரை உறுப்பினர் ஒவ்வொருவரும், அரசியல் சட்டத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'உரிமை'களை நிலைநாட்டிக் கொள்ளுகிறார்களா அல்லவா என்பது முக்கியமல்ல; அவர்கள் ஒவ்வொருவரும் பங்குகொண்டு, சிக்கல்களை விளங்கிக்கொண்டு முடிவுகளை மேற்கொள்ளுவதற்கு வசதியான ஒரு முறையிலே நாடாளுமன்றம் நடைபெற வேண்டும் என்பதே முக்கியம்.

மற்றவர்கள் புரிந்து கொள்ளுகிறார்களா இல்லையா என்றே கவலைப்படாமல், இந்திக்காரர்கள் இந்தியிலும் தமிழ்க்காரர்கள் தமிழிலேயும் பேசிக்கொள்வது என்றால்—இவர்கள் தங்கள் தங்கள் மாநிலச் சட்டசபைகளிலேயே இருக்கலாமே! நாட்டுக்குப் பொதுவான பேரவையாகிய நாடாளும்மன்றத்திற்கு இவர்கள் வரவேண்டியதே இல்லையே!

## புரியவேண்டாமா?

ஒவ்வொருவரும் அவருடைய தாய்மொழியில் அல்லது அவருக்கு விருப்பமான ஒரு மொழியில் தம்முடைய கருத்தை வெளியிட உரிமை உண்டு; இதுவே, குடியாட்சி அமைப்பில் எல்லோருக்கும் இருந்து வரவேண்டிய உரிமை.

இந்தியாவில் பல மொழிகளும் பண்பாடுகளும் இருந்தாலும் 'இந்தியா ஒரே நாடு' என்று வைத்திருக்கிறோம். அப்படி என்றால்—இன, மொழி வேறுபாடுகள் இல்லாமல், எல்லா இந்தியர்களும் இந்தியாவின் எல்லாப் பிரச்சினைகளிலும் பங்குகொள்ள வேண்டும் என்பது பொருள். அப்படிப் பங்குகொண்டு ஒருவர் பிரச்சினையை மற்றவர் புரிந்து கொண்டு, தேவையான இடங்களில் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் தான் நாம் முழக்கிவரும் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பொருள் உண்டு.

இந்தவிதமான உரிமை காக்கப்பட்டு இங்கே தேசிய ஒருமைப்பாட்டு எண்ணம் வலுப்பெற வேண்டுமானால், நமது நாடாளுமன்றத்திலாவது ஒருவர் பேசுவது மற்றவர்களுக்கு விளங்க வேண்டாமா? அதற்குரிய ஏற்பாட்டை நாம் செய்து கொள்ள வேண்டாமா?

## இதைச் செய்க!

ஒரே ஒரு மணி நேரம் நாடாளுமன்றம் நடைபெறுகிறது என்றால், பல ஆயிரம் ரூபாய் செலவாகிறது என்று மேலே கண்டோம். அதிக விலைமதிப்பு உடைய அந்த நேரத்தை மொழிப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதிலேயே கழித்தால் நாட்டுக்குத் தானே நட்டம்? இந்தச் சச்சரவுகளுக்கே இடம் இல்லாமல், அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள எல்லா மொழிகளிலும் பேச உரிமை அளித்து, எல்லா மொழிகளிலுமே உடனுக்குடன் மொழி பெயர்த்துச் சொல்ல ஏற்பாடு செய்தால் என்ன?

இது செயற்படுத்த முடியாத திட்டமல்ல; கொஞ்சம் அதிகமான பணம் செலவாகும் என்பதுதான் தயக்கம். ஆனால், ஒவ்வொரு நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலும் மொழிப் பிரச்சினையைப் பற்றிய சர்ச்சைக்குப் பல மணி நேரம் செலவாகிறது; அதற்காகப் பல லட்சம் ரூபாயைச் செலவிட்டுக் கொண்டு இருக்கிறோம். இன்னும் ஆயிரம் ஆண்டு ஆனாலும் இந்தச் சர்ச்சையும் அதற்காக ஆகும் செலவும் தீரப் போவதாகத் தெரியவில்லை. அந்தப் பெருந்தொகையில் ஒரு சிறிய பகுதியைச் செலவிட்டு, எல்லா மொழியிலும் உடனுக்குடன் மொழி பெயர்ப்புச் செய்ய ஏற்பாடு செய்துவிடுவது எவ்வளவோ நல்லது அல்லவா?

இதைச் செய்வதற்குப் பணத்தைவிட வேறொன்று தான் முக்கியமான தேவை. அதாவது குடியாட்சி உரிமை, தேசிய ஒருமைப்பாடு என்பவைகளை நமது அரசியலாளர்கள் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். விளங்கிக் கொள்ள அவர்கள் முயல்வார்களா?

# தொழிலாளர் விரோத கறுப்பு மசோதா தோல்வி கண்டது!

மராட்டிய மாநில சட்டப் பேரவையில் இந்திரா காங்கிரசு கூட்டணி அரசின் பொதுநிர்வாகத் துணைஅமைச்சர் 'உதயசிங் ராவ் கெய்க் வார்ட்' சில அத்தியாவசியப் பணிகளில் கட்டுப்பாட்டைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வகை செய்யும் ஒரு மசோதாவை அறிமுகம் செய்திட பேரவையின் அனுமதி கோரினர்.

பேரவையின் உறுப்பினர்களும், தொழிற் சங்கத்தலைவர்களுமான பி கே குர்னே, ஜகந்நாத்யாதவ் வசந்த்உபாத்யே, லாங்கே-போன்றோர், 'இந்த மசோதா தொழிலாளர்களின் நியாயமான-சட்டப்பூர்வ உரிமைகளை பாதிக்கின்ற ஒன்றாகும் அதுமட்டுமின்றி மராட்டிய மாநிலத்தில் உள்ள சுமார் 90 லட்சம் தொழிலாளர்களின் உரிமைகளில் கைவைக்கின்ற அக்கிரமமான மசோதா ஆகும்; ஆகவே இம்மசோதாவை பேரவையில் வைக்கக்கூடாது" என்று வாதாடினர்.

கடைசியாக இம்மசோதா அறிமுகம் செய்யவே தகுதியற்றது என்பதை எடுத்துக்காட்ட வாக்கெடுப்பில் 97 பேர் எதிர்த்தனர்; 89 பேர் ஆதரித்தனர் முற்போக்குக் கொள்கைக்கு முழுச் சொந்தம் கொண்டாடுகிற கூட்டணி அரசு மூக்குடைபட்டு மசோதாவைத் திரும்பப் பெற்றது.

# இந்தித் திணிப்பை முறியடிப்போம்!

-: ஒரு தென்னாட்டான் :-

**பம்பாயில் பணியாற்றும் தென்னகத்தைச் சேர்ந்த ஒரு நண்பர் 'நம்நாடு' இதழுக்கு எழுதியனுப்பிய ஆங்கிலக் கடிதத்தின் மொழிபெயர்ப்பே இது. (அவர் தமது பெயரை வெளியிட விரும்பவில்லை)**

★

பல்வேறு அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கிடையேயான இன்றைய சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, நிர்வாகத் துறையிலும்—மற்றும் பல துறைகள் மூலமும் இந்தியைப் புகுத்தி—இந்திமொழி பேசாத மக்கள் மீது அம்மொழியைத் திணிக்கப் பார்க்கிறார்கள் இந்தி வெறியர்கள்.

தங்கள் சொந்த வாழ்க்கையிலும், தேசிய அளவிலும் ஒலமிட்டெழும் எத்தனையோ பிரச்சினைகளுக்கிடையே இந்தத் திணிப்பை இந்தி பேசாத மக்கள் கவனிக்கமாட்டார்கள் என நம்புகிறார்கள் இந்தி வெறியர்கள்.

அவர்கள் நினைப்பதுபோல் நாம் அத்துணை முட்டாள்கள் அல்லர் என்பதை மெய்ப்பிக்கும் நேரம் வந்துவிட்டது. நம்மைக் குறித்த அவர்களுடைய தவறான கணிப்பை நீக்கியாகவேண்டும்.

எங்கெல்லாம் மறைமுகமாக இந்தி திணிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் அதை வெளிக்காட்டியாக வேண்டும்.

எடுத்துக் காட்டாக—

தெற்கிலாகட்டும் அல்லது வடக்கிலாகட்டும், எந்த வழியிலாவது, தேசிய அளவிலான பல நெருக்கடிகளுக்கிடையே, இந்தி பேசா மக்களின்—குறிப்பாகத் தென்னாட்டவர்களின்—உணர்வுகளையும், மனவோட்டங்களையும் புறக்கணித்துவிட்டு, நிர்வாகத்துறையில் இந்தித் திணிப்பு என்பது முக்கியத்துவம் பெறப் பார்க்கிறது.

"மத்திய அரசின் கீழிருக்கும் துறைகளில் இந்தியைத் தீவிரமாகத் திணிப்பதன் மூலம், நாட்டிலிருக்கும் பிற மொழிகளின் அமைப்பைச் சீரழிக்கப் பார்க்கும், 'தேசிய ஆட்சி மொழிக் குழுவை (National Official Language Committee) உடனடியாக நீக்க வேண்டும்" என்பதே இந்திய அரசுக்கு நாம் விடுக்கும் கோரிக்கையாக இருக்க வேண்டும். ஏதாவது 'சாக்குப்போக்கு'ச் சொல்லி இதற்கு அவர்கள் உடன்படாவிட்டால், மத்திய அரசின்கீழ் இருக்கும் துறைகளில் பணியாற்றும் இந்தி பேசாத பணியாளர்களை நோக்கி "ஆட்சி மொழிக் குழுவைப் புறக்கணியுங்கள்" என்று நாம் அறைகூவல் விடுக்க வேண்டும்.

இந்தி பேசாத மக்களுக்கு நேரு அரசு அளித்த வாக்குறுதிக்கு மாறாகவும், இந்தி படித்தே ஆகவேண்டும் என்று மறைமுகமாக அவர்களைக் கட்டாயப்படுத்தியும், 'மொழிக் குழுவினர்' என்று சொல்லிக் கொள்கின்றவர்கள் செயலாக்கப் பார்க்கும் யோசனைகளையும், கட்டளைகளையும், திட்டங்களையும் 'இந்திபேசா மக்கள்உறுதியாக நின்று எதிர்த்தே ஆகவேண்டும்.

**இன்றைய மத்திய அரசும் இந்தித் திணிப்பை தீவிரமாக்குவதில்தான் முழு மனதோடு, கண்ணும் கருத்துமாக இருக்கிறது.**

"சந்தேகத்திற்குரிய, மறைமுகமான பல வழிகளில் இடம் பெறும் இந்தித் திணிப்பை, மத்திய அரசின்கீழ் இருக்கும் நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து இந்தி பேசா மக்களும் ஓரணியாகத் திரண்டு எதிர்க்க வேண்டும்."

—இதுவே இந்தி பேசாத மாநிலங்கள் எழுப்பும் எழுச்சியூட்டும் குரலாக முழங்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற இன்னபிற இயக்கங்களும் தென்னிந்திய மொழிகளை நசுக்கப் பார்க்கும் இந்தி ஆக்கிரமிப்பாளர்களையும், இந்தித் திணிப்பையும் எதிர்த்துப் போரிட வேண்டும்.

தென்னாட்டு மொழிகளுக்கும், பண்பாட்டிற்கும் பாதுகாவலாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகமும்—பிற இயக்கங்களும், மத்திய அரசின் கீழிருக்கும் வங்கிகள், அலுவலகங்கள் போன்ற இன்னபிற அலுவலகங்களின் முன் அமைதியான சத்தியாக்கிரகப் போர் போன்ற நடவடிக்கைகள் மூலம் இந்தித் திணிப்பைத் தடுக்கவேண்டும்

இந்தித் திணிப்பால் ஏற்படும் ஆபத்தை உணர்த்த, நாடெங்கிலும் இம்மாதிரியான போர்கள் நடந்தால், அவைகள் இந்தி வெறியர்களின் கண்களைத் திறக்கச் செய்யும்.

இந்தி பேசா மக்களின்—குறிப்பாகத் தென்னாட்டவர்களின்—விருப்பத்திற்கு மாறாகவும் நியாயத்திற்குப் புறம்பாகவும் மத்திய அரசின் கீழிருக்கும் நிறுவனங்களில் இந்தித் திணிப்பு இடம் பெற்று வருகிறது.

இந்தி வெறியர்களின் ஏமாற்றுத்தனமான வாக்குறுதிகள் எந்த வடிவில் வந்தாலும் அதைக் கண்டு நாம் மதிமயங்கி விடக்கூடாது; ஏனென்றால், தேசிய ஒருமைப்பாடு, தேச ஒற்றுமை என்ற பெயர்களால், இந்தி பேசா மக்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும் மதிக்காது, மறைமுகமாக இந்தியைத் திணிக்க முயற்சி செய்கிறார்கள் அவர்கள் — நாடாளுமன்றத்தில் 'மிருக பலம்' (Brute Majority) தங்களுக்கிருக்கும் தைரியத்தால்!

திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற இயக்கங்களால் மட்டுமே இந்த அநீதியை எதிர்த்துப் போரிட இயலும்; தங்களுக்கிடையே இருக்கும் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, இதற்காக வேண்டி அவர்கள் அனைவரும் ஓரணியாகத் திரள வேண்டும்.

தென்னாட்டவர்களுக்கும் அவர்தம் மொழிகளுக்கும் ஏற்படும் பாதிப்புக்களை அவ்வியக்கங்களால் மட்டுமே உரத்தும் எதிரொலிக்க இயலும்.

தென்னாட்டவர்கள் விரும்பும்வரை ஆங்கிலம் மட்டுமே அனைத்திந்தியாவிலும் நிர்வாக மொழியாக இருக்கவேண்டும்; இதிலேதும் சந்தேகமோ, 'விட்டுக் கொடுக்கும்' போக்கோ இருக்க முடியாது. நேரு அளித்த வாக்குறுதியும் இதுவே! ஏதாவது 'சாக்குப் போக்கு'க் கூறி இதை திசை திருப்பிவிட இயலாது.

இம்மொழிப் பிரச்சினையில், அனைத்து இயக்கங்களையும், சமயங்களையும் சேர்ந்த மக்களனைவரும் ஒன்று திரண்டு ஒரு கொடியின்கீழ் நிற்க வேண்டும். ஏனென்றால், நம் தாய்மொழியின் தனித்தன்மையை நாம் காப்பாற்றியாக வேண்டும்.

இதில் ஒரு துயரம் என்னவென்றால், இந்தி ஆக்கிரமிப்பாளர்களுக்குத் துணையாக தென்னாட்டைச் சேர்ந்த சில இந்திதாசர்கள் 'கைக்கூலிகளாக' இருக்கிறார்களே என்பதுதான். இருந்தாலும் நம் நிலைக்கு எதிர்ப்பாக அவர்கள் நின்றால் மக்கள்முன் அடையாளம் காட்டப்பட்டு அவர்கள் தூக்கி எறியப்படுவார்கள்.

மிருகப் பெரும்பான்மை பலத்தைக்கொண்டஇந்தியை அனைத்திந்திய நிர்வாக மொழியாக வர அனுமதித்தால்—காலப்போக்கில் அது பிற இந்திய மொழிகளின் வளர்ச்சியைத் தடை செய்துவிடும். குறிப்பாக வளமிகு தென்னாட்டு மொழிகளின் வளர்ச்சி தேக்கமடைந்துவிடும்.

**ஆகவே, எந்தச் சூழ்நிலையிலும் இதை நாம் அனுமதிக்கக் கூடாது.**

இந்தியாவின் இணைப்பு மொழியாக ஆங்கிலமே இருக்க வேண்டும் என்பது தான் தென்னாட்டவர்களின் விருப்பம். பிற இந்திய மொழிகள்மீது ஆதிக்கம் செலுத்தப் பார்க்கும் இந்தியைத் தடுத்து நிறுத்தி, சமமான இணைப்பு மொழியாகச் செயல்பட ஆங்கிலத்தால் மட்டுமே இயலும்.

மத்திய அரசின் ஆட்சி மொழியாக ஆங்கிலமும், மாநில அரசுகளின் ஆட்சி மொழியாக அவரவர் மாநில மொழிகளும் இருக்க வேண்டும் என்பதே நமது கோரிக்கை.

இடங்களைப் பொறுத்து—எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் மத்திய அரசின் கீழிருக்கும் துறைகளில் ஆங்கிலத்தோடு அவரவர் மாநில மொழிகளையும் பயன்படுத்தலாம்.

'ஆங்கிலம் அயல்நாட்டு மொழி' என்பது போன்ற கவைக்குதவாக் காரணங்களைக் காட்டி, இந்தி வெறியர்கள் தென்னாட்டவர்களின் கோரிக்கைகளைப் புறக்கணிக்க முயல வேண்டாம்.

சில குறைபாடுகள் இருந்த போதும், இந்தி பேசா மக்கள் இருக்கின்றவரை — அவர்கள் விரும்பும்வரை— ஆங்கிலம் மட்டுமே இரண்டாவது மொழியாகவும் இணைப்பு மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

தென்னாட்டவர்களாகிய நம்முடைய அழகுமிகு மொழிகளைச் சீர்குலைக்கும் போக்கோடு — இந்தியைத் திணிப்பதற்கு ஆர்வம் காட்டுவதற்கு மாறாக— தென்னாட்டவர்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும் புரிந்துகொண்டு, அவர்களின் கோரிக்கைகளை மதிப்பதற்கான அறிகுறியாவது காட்ட வேண்டும்.

பொது மொழியாக இந்தியாவில் திகழும் ஆங்கிலம் ஒரு இரண்டாவது மொழி என்றபோதும், அதுவே இணைப்பு மொழியாக இருக்க முடியும்!

---

ஒரு பத்திரிகைச் செய்தி :— ஆட்சி மொழித் தொடர்பான நாடாளுமன்றத்தின் இரண்டாவது துணைக்குழு பம்பாயில் ஐந்து நாட்கள் தங்கியது. திங்கட்கிழமை தொலைக்காட்சி (டெலிவிஷன்) நிலையத்து அதிகாரிகளையும், செய்தி ஒலிபரப்புத்துறை அதிகாரிகளையும் சந்தித்த குழுவினர், நிர்வாகத் துறையில் இந்திமொழி பயன்படுத்தப்படுவது எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது என்பது குறித்து ஆய்வு செய்தார்கள்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகள் சார்பான இந்தக் குழு, ஆட்சி மொழித் தொடர்பான 1963ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டது. தன்னுடைய பரிந்துரைகளைக் குடியரசுத் தலைவரின் முன் இக்குழு வைக்கும்.

இந்த இரண்டாவது துணைக்குழுவின் அமைப்பாளரான திரு. யோகேந்திர சர்மா, நிர்வாகத் துறையில் இந்திமொழியைத் தீவிரமாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்; 1963ஆம் ஆண்டுச் சட்டத்தில் இருக்கின்ற விளக்கங்களின் கீழ் – ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளின் தேவையையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த இரண்டாவது குழுவின் உறுப்பினர்களான திரு. குமரி அனந்தனும், திரு. தேவேந்திர சத்பதியும் வந்திருந்தார்கள்.

பம்பாயிலிருக்கும் 'இந்திய அரசு உணவுத்துறை நிறுவனத்தின்' அதிகாரிகளையும், 'காட்டன் டெவலப்மெண்ட்' (Cotton Development) இயக்குநர்களையும், திரைப்பட முதலீட்டுத் துறையினரையும் (Film Finance Corporation), அனைத்திந்திய வானொலி நிலையத்தாரையும், மத்திய புகைவண்டித் (Central Railway) துறை அதிகாரிகளையும், தொலைபேசி நிறுவனத்தாரையும், சந்தித்து இந்தக் குழு பேச்சு நடத்தியது. — மெயில்.

---

நம் நாடு

புதிய சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25.00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்றுமாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகி,
நம் நாடு,
அன்பகம், சென்னை-600018

# மக்களாட்சியும் மனித இயல்பும்

அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் உரிமை ஆண்டவன் மூலமோ அல்லது மதத்தலைவர்கள் மூலமோ ஒரு சாராருக்கு கிடைக்கப்பெற்றது என நிலவி வந்த கருத்தை எதிர்த்து அந்த உரிமை பொது மக்கள் அனைவரையும் சார்ந்தது எனும் கருத்துத் தோன்றியது. அதே சமயத்தில் மனித இயல்பிலும் அறிஞர்கள் சிரத்தை எடுத்துக்கொண்டு சிந்தித்தனர். இதற்குக் காரணம் இல்லாமல் போய்விடவில்லை. மக்களாட்சி அரசியலை வற்புறுத்துவது என்பதற்கும் மனித இயல்பின் முக்கியத்துவத்தை உணர்வது என்பதற்கும் இடையே ஆழ்ந்த ஒற்றுமை உண்டு. இதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் அரசியல் என்ற தலைப்பிலே மக்களாட்சி அரசியல் குறிப்புகளை நமக்குத் தருகிறார் அதையே கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாடிலும் சந்திரகுப்தனுக்கு உதவியாக இருந்த கௌடில்யனும் எடுத்துரைத்தார்கள்.

மனித இயல்புதான் எல்லாவித நியாயமான அரசியல் கோட்பாடுகளுக்கும் அடிப்படை என்பதை அண்மைக்கால வரலாறு வலியுறுத்திச் சொல்கிறது. அரசியல், ஆட்சி, குடிஉரிமை, சட்டப்படி ஒழுகு நல் ஆகியவை மனித இயல்பைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளன. மனித இயல்பைப் பற்றியும், அதில் அடங்கியுள்ள கோட்பாடுகள் பற்றியும், அதில் அடங்கியுள்ள நிகழ்ச்சிளுக்கிடையே உள்ள சம்பந்தம் பற்றியும் அதில் நிலவுகின்ற குறைகளைச் சார்ந்தே மக்களாட்சிக் கோட்பாடுகள் இயங்குகின்றன. அக் கோட்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன; ஏற்படவேண்டும் என்பதுதான் உண்மை.

மனித இயல்புக்கும் ஜனநாயகத்திற்குமிடையே உள்ள சம்பந்தம் அறநெறியைச் சார்ந்தது எனும் கோட்பாடு பொதுவாக ஏற்கப்பட்டுள்ளது. ஆங்கில நாட்டு சம்பிரதாய அரசியல்வாதிகள் இதைத்தான் சொன்னார்கள். சில குறிப்பிட்ட மனிதனின் குறிப்பிட்ட ஆவல்களே சமூக நிகழ்ச்சிகளுக்குக்

**அ. சுப்பையன்**
எம். ஏ.,

காரணம் என்றும் இவற்றை அடிப்படையாகக் கொண்டே நாம் நேர்மையான சமூகத் திட்டத்தைத் தீர்மானம் செய்ய வேண்டும் என்று கூறுகின்ற கோட்பாடுகள் மனச்சான்றை அல்லது உளவியலை சார்ந்தவை எனக் குறிப்பதில்லை. எனினும் இவை மனத்தைச் சார்ந்த கருத்துக்களே மக்களாட்சிக்கும் முதலாளித்துவ முறை அரசியலுக்குமிடையே இன்றியமையாத ஓர் உறவு இயல்பாகவே இருக்கிறது எனும் கோட்பாடு உண்மையில் மனத்தின் இயல்புகளைப் பற்றியும் சார்புகளைப்பற்றியும் நாம் கொண்டுள்ள கருத்தை அடிப்படையாகக் கொண்டதேயாம். மனித இயல்பைப் பற்றி ஒரு தனியான கருத்தைக் கொண்டவர்கள் மாத்திரமே மக்களாட்சிக்கும் முதலாளித்துவத்திற்கும் இடையே இரு உடலும் ஒட்டி நிற்கும் இரட்டைக் குழந்தைகள் போல இணைபிரியாத சம்பந்தம் இருக்கிறதெனக் கருதுகின்றனர்.

சமூக நிகழ்ச்சிகளையும் மன நிகழ்ச்சிகளையும் எழுச்சிகளையும் கொண்டு விளக்கமளித்த ஆங்கில அறிஞர் ஜான் ஸ்டுவாட் மில் "சமூகத்தில் தோன்றும் எல்லா நிகழ்ச்சிகளும் மனித இயல்பின் நிகழ்ச்சிகளே - மனிதனின், சிந்தனை உணர்ச்சி செயல் ஆகியவை எப்படி நிலையான நியதிகளுக்குக் கட்டுப்பட்டவையோ அதுபோல சமூக நிகழ்ச்சிகளும் ஒரு நியதிக்கு அடங்கியவையே" என்றும் "சமூக நிகழ்ச்சிகளைப் பற்றிய நியதிகளெல்லாம் அந்தச் சமூகத்தில் இணைந்து நிற்கும் மனிதர்களின் செயல்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் சம்பந்தப்பட்ட நியதிகளைத் தவிர வேறல்ல." என்றும் அவர் கூறினார். சமூதாயத்தில் மக்களாட்சித் தத்துவம் வேரூன்ற வேண்டும் என்று எண்ணிய அவர் "தனி மனிதனின் இயல்பைச் சார்ந்த நியதிகளின் மூலம் கிடைக்கப்பெற்ற குணங்களே சமூகத்தில் வாழும் மனிதர்கள் குணங்களாகும்" என்று விளக்கினார். இதையே தான் சாக்ரடீசின் மாணவர் பிளாட்டோ "எத்தனையோ சமூக அரசியல் தொல்லைகளுக்கிடையே சிக்குண்டு கிடக்கின்றீர்கள். அவற்றுள் பலவும் உங்கள் பொறுப்பில் உள்ளன. ஆனால் அவற்றை மாற்றி அமைக்க நீங்கள் என்ன செய்ய வேண்டும்; துணிய வேண்டும்; அவ்வளவுதான்; எண்ணிப் பார்க்கவும் எண்ணியவாறு செய்யத் துணியவும் மனம் கொண்டால் வேறோர் அறிவான நெறியில் வாழ முடியும் உங்கள் ஆற்றலை நீங்கள் இன்னும் உணராமல் இருக்கின்றீர்கள் என்று கூறிய அறிவுரை மக்களாட்சியின் அடிப்படைக் கோட்பாடுகளைச் சேர்ந்தது. இவர்களுடைய வாதத்தில் அடங்கிய உளவியல் கோட்பாடு எல்லா விதமான அரசியல் பொருளாதார மாற்றத்திற்கும் உயிர் அளிக்கின்றது. அவர்கள் வாதத்தில் அடங்கியவைகள் தற்காலப் பாட புத்தகங்கள் போதிக்கும் உளவியல்சித்தாந்தத்தைச் சார்ந்தவையல்ல. இக்கோட்பாடுகள் நூல்களின் மூலமாக விளக்கப்பட்டபோதிலும் அது வெறும் நூலாராய்ச்சி வாதமாக நிற்கவில்லை. தேர்தல் கூட்டங்களில் விளக்கப்பட்டு அதை சட்டமன்றம் சட்டமாக அமைக்கவேண்டுமென்று மக்கள் கோரிய கருத்துக்களே பின்னர் புத்தகங்களில் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன. மனித இயல்பின் திரண்ட தெளிவான உருவமே சமூகத்தில் நிலவும் மக்களாட்சிக் கொள்கை.

அதாவது, பண்டைநாட்களில் சுயநலமே மனிதனைச் செயலாற்றத் தூண்டுகிறது என்று கருதியதுபோல இப்பொழுது அதிகார ஆசையே மனிதனைச் செயலாற்றத் தூண்டுகிறது என்று கருதப்படுகிறது. ஆனால் அறிவு பூர்வமாக விரும்பியே அமைத்துக்கொள்ளப்பட்ட உறவுகள் அதிகாரம் செலுத்தும் சட்டங்கள், நிபந்தனைகள் ஆகியவற்றைச் சிறப்பித்துக் காட்டி இவை, மனிதனுடைய வெளிச் செயல்களை மட்டுமின்றி, அவனுடைய குறிக்கோள்களையும் அவன் சாதிப்பதற்கு உரித்தானவற்றையும் நிர்ணயிக்கின்ற கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் அடக்கியாள வேண்டுமென்பதே ஹாப்ஸ் என்ற அறிஞரின் கருத்தாகும்.

சம்பிரதாயம், வழக்கம், சட்டம், பொதுமக்கள் அங்கீகாரம், பொதுமக்களின் நிராகரிப்பு — இப்படிப் பல்வேறு வகை சூழ்நிலை நிலவுவதால் மனித இயல்பின் குணம் அதன் விளைவுகள் நலன் தருவதாயுமிருக்கலாம்; தீமை விளைவிப்பதாயுமிருக்கலாம் அதனால்தான் செயற்கரிய செய்த பெரியார் யாவரும் உண்மையில் தெரிந்தோ, தெரியாமலோ உலகம் முழுமைக்கும்-மனித இனத்துக்கே-நலஞ் செய்யும் அகத்தூண்டுதல் உடையவராவர். ஏனெனில் இதுவே பெரியாருக்கு உரிய பண்பு. இத்தகையவர் வெற்றி கண்டாலும் பெரியார்களே! தோல்வி கண்டாலும் கூடப் பெரியார்களே! ஏனெனில் பெருமையும்சிறுமையும்வெற்றி தோல்விகளைப பொறுத்தவையல்ல. பண்பையே பொறுத்தவை; பெரியோர் உள்ளத்தில் நிலவும் இப்பேரன்பு அவரைச் சுற்றி எப்போதும் அன்பலை வீசிக்கொண்டே இருக்கும். அவர் செல்லுமிடமெல்லாம் அது செயலாற்றும் அவர் பெயர் கேட்கப்படும் இடங்களிலெல்லாம் அது நுண்ணலைகளாகப் பரவாமலிராது. அது அவர் குடும்ப எல்லையிலடங்காமல் சமுதாயத்திலும், சமுதாயத்தில் அடங்காமல் மனித இனம் முழுவதும் பொங்கிப் பொலிவுறும் அது எங்கும் துயரகற்றும் ஆறுதலளிக்கும். அது எங்கும் அழகும் இன்பமும் மெய்யுணர்வும் அறிவும், இனிமையும் இன்னலமும் பரப்பி ஒளிவீசும்-ஏனெனில் மனித இயல்பு மாறுந்தன்மையுடையது எனும் வாதத்தை ஏற்க முடியாது மனித இயல்பில்

(10-ம் பக்கம் பார்க்க)

## மதிப்புரை

### 'தனித்திருந்த வேளையில்'

(சிறு கதைகள்)

கவிஞர் திரு. குருவிக்கரம்பை சண்முகம் இன்றைய கவிதைத் துறையில் தனக்கென்று ஓர் இடத்தைப் பெற்றிருப்பவர்! நடைமுறைக் கண்ணோட்டத்தோடு கவிதையை அணுகும் அவர் தன் கவனத்தைச் சிறுகதைத் துறையில் திருப்பியிருப்பது வரவேற்கத்தக்கதே.

வாழ்க்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளையும், பலதரப்பட்ட குணப் போக்குள்ள ஆண், பெண்களையும் 'சிறுகதைகள் என்ற பலகணி மூலம் நோக்கிய அவர் தம் அனுபவங்களை வடித்தெடுத்துத் 'தனித்திருந்த வேளையில்' என்ற தலைப்பிட்டு பன்னிரண்டு சிறு கதைகளை வழங்கியுள்ளார்.

பன்னிரண்டு சிறுகதைகளும் பல்வேறு பிரச்சினைகளைத் தொட்டுக்காட்டுகின்றன. - ஆனால் மூன்று கதைகள் அவைகளில் முத்துக்களாக ஒளி வீசுகின்றன.

'காயங்கள்' என்ற சிறுகதை குடிகார ஓவியன் ஒருவனின் 'பிறருக்கு உதவும் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அவனைப்பற்றி- அவன் குறைபாடுகளைப் பற்றி விமரிசனம் செய்யும் 'நல்லமனிதர்கள்' நெருப்பிடையே அகப்பட்டுக்கொண்டு சிறுமிஒருத்தியின் உயிர் ஊசலாடுவதை வேடிக்கை பார்ப்பதையும், அந்தக்குடிகார ஓவியன் உயிரைத் துச்சமென மதித்து அவளைக் காப்பாற்றுவதையும் மனதைத் தொடும்படிச் சித்தரிக்கிறது

'பத்மாவும் பிரேமாவும்' கவரிமானைப் போன்ற இரு சகோதரிகளின் கதை. 'ஏண்டி நீங்க ரெண்டுபேரும் மனசு வைச்சா ரெண்டு ராத்திரியிலே சம்பாதிக்கலாம்...' என்ற தகப்பனின் சுடு சொல்லைக் கேட்டு உயிரையே மாய்த்துக் கொள்கிறார்கள்; கண் கலங்கச் செய்யும் கதை.

'அந்தக் காலத்தில்' வாழ்க்கைப் போராட்டத்தை விளக்கும் சிறுகதை. 'வலிமைஉள்ளவையே எஞ்சும்' என்ற தத்துவத்தை ஒரு நாய் மூலம்சொல்கிறார் ஆசிரியர்.

கவிதைத் துறையைப் போலவே சிறுகதை இலக்கியத்திலும் தமக்கென்று ஓர் இடத்தை ஆசிரியர் பெறுவார் என நம்பலாம்.

96 பக்கங்கள் விலை ரூ. 3

கிடைக்குமிடம் :
பாண்டியன் பதிப்பகம்,
21, மூன்ருவது குறுக்குச் சாலை கிழக்கு.
சென்னை - 600030.

ஃ ஃ ஃ

### 'இலட்சியப் பயணம்'

(கட்டுரைகள்)

'கழகக் குரல்' 'தமிழ்மணி' ஆகிய கழக இதழ்களில் திரு. அலவை. பெ. மாணிக்கம் தீட்டிய பதினறு கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

இனமும் மொழியும் தமிழர்க்கு இரு கண்கள் எனச் சிறப்பித்துக் கூறும் கட்டுரைகள்; அதற்காக அறிஞர் அண்ணாவும். அவர் வழி நின்று கலைஞரும் ஆற்றிய பணிகளை விளக்கும் கட்டுரைகள் மட்டுமல்லாது-

மாற்றாரின் மரமண்டையில் ஓங்கி அடிப்பதுபோல் விளக்கமான பதிலளிக்கும் 'தேய்ந்த லாடத்தின் 'தீய்ந்தஎண்ணம்,' 'நடிகர் நாடகமாடுகிறார்!' — போன்ற வேகமும் விறுவிறுப்பும் கொண்ட கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.


இந்நூலின் முன்னுரையில் பேராசிரியர் அன்பழகன் பாராட்டியிருப்பது போல், "அழகு தமிழில் எடுப்பான சொற்கோவையுடன் ஆற்றல் மிக்க கட்டுரைகள்" வழங்கியுள்ளார் ஆசிரியர்.

கழகத்தவர் மட்டுமல்லாது தமிழார்வம் கொண்ட அனைவரும் படிக்க வேண்டிய கட்டுரைத் தொகுப்பு இது.

64 பக்கங்கள்; விலை ரூ. 2

கிடைக்குமிடம் :
அண்ணா அறிவகம்;
அலவாக்கோட்டை,
முகவை மாவட்டம்.


டாக்டரை நேரில் சந்திக்க




முடியாதவர்களுக்கு வைத்திய ஆலோசனை இலவசம். உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற

பழனி டாக்டர்
எஸ். காளிமுத்து
R.M.P. (IND. V. V. C. A. I. H.)
பழனி — 624601

என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் ஆலோசனைகளும், சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்,

போன்: 316, 316 ஏ, 420 தந்தி: சித்தர்

# சபலம்



காற்றைக் கிழித்துக்கொண்டு 'இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ்' திருச்சி நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. சென்னையில் இரவு எட்டு மணிக்கு வண்டியில் ஏறியவர்கள் அலுப்போடும் களைப்போடும் போராடிக்கொண்டு முதுகை வளைத்துக் கொண்டே அமர்ந்திருந்தனர். சென்னை இரயில்நிலையத்தில் இடம் வாடகைக்கு விடும் பொடிப் பயல்கள் பலருண்டு. அவர்கள் தங்கள் வாழ்க்கையை இப்படியே நடத்திப் பழகிக்கொள்கிறார்கள்.

வண்டியில் ஏறியோ — அல்லது ஏறாமல் இரயில் மேடையைச் சுற்றிக்கொண்டோ இடம் அகப்படுமா என்று தவித்துக் கொண்டிருப்பவர்களிடம், கதைகளில் பகவான் 'பிரத்யட்சமாவது போல' ஒரு பொடியன் வந்து நிற்பான். "சாமி, இங்கே வாங்க; நல்ல இடம்" என்பான்.

அவன்கூடச்சென்றால் போதும் வண்டிக்குள் அருமையான இடத்தைக் காட்டிப் பலகையில் அவன் விரித்திருந்த 'பட்டு மெத்தை'யை எடுத்து முண்டாசு கட்டிக்கொள்வான். அந்த இடத்தில் தூங்குவதற்கு — டிக்கட் பணம் போக அவனுக்கு ஒரு நாலணா வாடகை.

இப்படிப் பல பையன்கள் வாடகை வியாபாரம் நடத்துவார்கள். அவர்கள் கண்ணில் அகப்பட்டுக் கருணைக்குப் பாத்திரமான பிரயாணிகள் கண்ணயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். அந்தப் பாக்கியம் கிடைக்காத பலர் கண்ணுக்குள் நுழைந்து இமைகளைப் பிடித்திழுத்து மூடும் உறக்கத்தை எதிர்க்கத் துணிவற்று ஒருவரோடொருவர் மோதிக்கொண்டிருந்தனர்.

கழுத்தில் நிற்கச் சக்தியிழந்து தொங்கும் தலையை முழங்காலிலோ — பக்கத்திலிருப்பவர்கள் தோல் பட்டையிலோ — அல்லது ஜன்னல் கட்டையிலோ முட்டுக் கொடுத்துக் கொண்டு அமர்ந்திருந்த காட்சி பரிதாபமாயிருந்தது.

இந்தக் 'கும்பகர்ண லோ'கத்தில் கொட்டை கொட்டையாக விழித்துக்கொண்டிருந்தவர்களும் இல்லாமலில்லை. நூற்றுக்கு ஒருவராவது இருக்கத்தான் செய்தனர்; வண்டியில் ஆறுவது பெட்டியில் ஜன்னல்வழியாகக்கூடக் கால்களை வெளியே சிறிது நீட்டிக் கொண்டு கஷ்டப்பட்டுப் பலர் குறட்டை விட்டுக் கொண்டிருந்தனர்.

நீண்ட ஒரு பலகையின் மூலையில் உட்கார்ந்திருந்த ஒருவன், அலுப்பைப் பற்றிய அக்கறைகள் எதுவுமில்லாமல் ஏதோ ஒரு உணர்ச்சியில் அங்குமிங்கும் பார்ப்பதும், பலகைக்குக் கீழே கவனிப்பதுமாயிருந்தான்.

அவனுக்கு எதிரில் மற்றொரு பலகையில் மற்றொரு வாலிபன் கண்களைமூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் விழிகள் மூடியிருந்தனவே தவிர — அவன் தூங்கவில்லை யென்பது தெளிவாயிற்று விழிகளும் முக்கால் பாகந்தான் அடைப்பட்டிருந்தன. கால்பாகத்தின் வழியாக அவன் பார்வை எதிரில் உட்கார்ந்திருக்கும் வாலிபனையும் பலகைக்குக் கீழே படுத்திருக்கும் ஒரு பெண்ணையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவனும் சந்திராவும் தங்கள் குழந்தையுடன் சென்னையில்தான் ஏறினார்கள். அவர்கள் ஏறி உட்கார்ந்த சிறிதுநேரத்துக்கெல்லாம் எதிர்ப் பக்கத்தில் அந்தத் தூங்காத வாலிபன் வந்து உட்கார்ந்தான். வந்தவன் எதிர்பாராவிதமாக அங்கு வந்து அமரவில்லை. எல்லாப் பெட்டிகளையும் ஒருமுறைக்கு இரண்டு முறையாக கவனித்துவிட்டுக் கடைசியில் இங்கு வந்து ஏறிக்கொண்டான்.

சந்திராவின் கையிலிருந்த குழந்தை அருகிலிருந்த ஒரு கிழவியின் நரை மயிரைத் தன் தளிர்க் கரங்களால் பிடித்திழுக்கவே — கிழவி பொக்கை வாய்ச் சிரிப்பை உதிர்த்துக் கொண்டே அந்த மழலையிடமிருந்து தலையை விடுவித்துக் கொண்டாள்.

இதோடு கிழவி சும்மாயிருக்கவில்லை. கிழவிகளின் குணமே நல்லதோ கெட்டதோ ஏதாவது பேசிக் கொண்டிருக்க வேண்டுமல்லவா?... அதுவும் குழந்தையென்றால் கேட்க வேண்டுமா?

"என்னடி கண்ணு; உன் பேரு என்ன?" என்று கிழவி கொஞ்சினாள்.

"மூர்த்தி" என்று கணீரென்று உச்சரித்தது குழந்தை.

"உங்க அப்பாபேரு?" என்றாள் கிழவி.

"எங்கப்பா பேரு குமரேஸ். உன் பேரு என்ன?" என்று குழந்தை கேட்டவுடன் — கிழவிக்கு ஆனந்தம் தாங்கவில்லை

குமரேசும் — சந்திராவும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

அப்போது எதிர்ப் பலகையிலிருந்தும் ஒரு சிரிப்பு வெடித்தது. அதைச் சந்திரா கவனித்தாள். சிரித்தவனும் சிரிப்பினூடே சந்திராவைத்தான் உற்றுப் பார்த்தான்.

அவனைப் பார்த்த சந்திரா திடுக்கிட்டு அப்படியே ஸ்தம்பித்துவிட்டாள். ஆனாலும் திடப்படுத்திக்கொண்டு குழந்தையின் விளையாட்டைக் கவனித்தாள் இடையிடையே அவள் நீலக் குறுவிழிகள் மட்டும் எதிர்ப்பக்கத்திலுள்ள அந்த வாலிபனையே அடிக்கடி விழுங்கிக்கொண்டிருந்தன. அந்த வாலிபன் நல்ல அழகன்; விசாலமான கண்கள்; அரும்பு மீசை' அழகை அதிகப்படுத்தப் பளபளப்பான பட்டுச் சட்டை' அவனது பெரிய கண்கள் சந்திராவைப் பார்க்கும் போதெல்லாம் போதையேறிக் காணப்பட்டன.

சந்திராவும் தனக்குப் பக்கத்திலேயே கணவன் இருப்பதையும் மறந்தவள் போல, அவனை அடிக்கடி பார்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்தாள். இதைக் குமரேசும் ஜாடையாகப் புரிந்து கொண்டான்,

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. சந்திரா தன் கணவனோடு ஏதாவதும் பேசுவதும் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டுவதும், அதே நேரத்தில் எதிரே உள்ளவனைக் காணுவதுமாயிருந்தாள். குமரேசுக்கு ஏதாவது சொல்லிவிட வேண்டுமென்று மனம் குமுறியது. தன் மனைவி-தனக்கருகில் உட்கார்ந்து கொண்டே இன்னொருவனின் அழகை ரசிப்பதென்றால்...இதை அவனால் நினைக்கவேமுடியவில்லை.

அழகுக்காகத்தான் சந்திராவை அவன் மணம் புரிந்தான். அவள் வீட்டுக்கு வந்தபிறகு அறிவும் நிரம்பியவள் என்பது கண்டு மகிழ்ச்சிகொண்டான். குதூகலமாக ஓடிக்கொண்டிருந்த அவர்களின் குடும்ப வாழ்க்கைக்கு அந்த இரயில் பிரயாணம் முட்டுக்கட்டையாகத்தான் வாய்த்தது. இவன் நெஞ்சிலே இந்தப் போராட்டம்-ஆனால் சந்திராவோ எதிர்ப் பலகைக்கு வீசும் கண்களை நிறுத்தியபாடில்லை. குமரேஸ் கொந்தளித்தான். முழுதும் கவனித்து ஒரு முடிவு கட்டிவிட வேண்டுமென்ற தீர்மானம்-அவனை அமைதிப்படுத்தியது.

குழந்தை நன்றாகத் தூங்கிவிட்டது. வண்டியும் விழுப்புரத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. அந்தப் பெட்டியில் இருந்தவர்கள் தூக்க மயக்கத்தில் தள்ளாடிக் கொண்டிருந்தார்கள்.

மூர்த்திக்கு இரயிலில் கிடைத்த புதுப் பாட்டியின் வாயிலிருந்து 'புஸ் புஸ்' என்று மூச்சு வந்துகொண்டிருந்தது. சந்திரா குழந்தையைக் கீழே போட்டுத் தூங்க வைப்பதற்காக முயன்றாள். குமரேசின் தோளிலிருந்த துண்டை எடுத்துப் பலகைக்குக் கீழே விரித்துத் தானும் கீழேயே படுத்துக் கொண்டாள். குழந்தையையும் பக்கத்தில் படுக்க வைத்துக் கொண்டாள். அவள் படுக்கும் போதே குமரேசைப் பார்த்து வழக்கமான புன்சிரிப்பைக் கொட்டி விட்டுச் சாய்ந்தாள். ஆனால் குமரேஸ் பதிலுக்குச் சிரிக்கவில்லை. அவன் நெஞ்சு குமுறுவது அவளுக்கு எப்படித் தெரியும்?

எதிரேயிருந்தவனுக்கு இப்போது தலையைக் குனிய வேண்டிய வேலை ஏற்பட்டது. கண்களை மூடிக் கொண்டு தூங்க முயலும் சந்திராவின் முகத்தில் அவன் எந்தக் கனியழகைக் கண்டானோ தெரியவில்லை. ஒரே ரசனைதான் அவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை வயிறு காய்ந்து வாடுபவனுக்கு எதிரே வட்டில் நிறையப் பொங்கலை வைத்தால்...? அந்த நிலைபெற்றான். அவன் உணர்வு ஒரு நிலையில் இல்லை என்பது அவன் அசைவுகளிலேயே பளிச் பளிச்செனமின்னிக்கொண்டிருந்தது.

சந்திராவின் தனிப் பார்வை வேறு அவனைப் பம்பரமாக ஆட்டி வைத்திருந்தது. அவனுக்கு அன்று ஒரு நல்ல வாய்ப்புதான். எத்தனையோ பெட்டிகளைத் துருவிப் பார்த்து இதுபோன்ற ஒரு நல்ல இடம் கிடைக்காமல் கடைசியில்-நட்சத்திரத்திற்குக் குறிவைத்தபோது சந்திரனே விழுந்து விட்டதுபோல-கிடைத்த இடமல்லவா இந்த இடம்? தூங்கும் சந்திராவை இவன் ரசித்தான்-ரசித்தான்-அப்படி ரசித்தான்!

இந்த ரசமான கட்டத்தில்தான் குமரேஸ் முக்கால் கண்ணை மூடிக் கொண்டு நடப்பவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். சந்திரா எப்படியும் கையுங்களவுமாகப் பிடிபட்டு விடுவாள் என்று துடித்துக் கொண்டிருந்தான். எதிரே இருந்தவன் குமரேசை அடிக்கடி பார்ப்பதும் தன் கால்களால் அவள் கையை மெதுவாகத் தீண்டுவதும் மீண்டும் சுற்றும் முற்றும் பார்த்துச் சும்மாயிருப்பதுமே வேலையாயிருந்தான்.

வண்டி நெல்லிக்குப்பத்தைத் தாண்டி விட்டது. சந்திரா அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் பொற்கரம் குழந்தை மூர்த்தியை அணைத்தபடி இருந்தது. அந்த வாலிபன் ஏதோ ஒரு புதுத் துணிவுடன் பெருமூச்சு விட்டான்.

குமரேசையும் கூர்ந்து நோக்கிக் கொண்டான். குமரேஸ் தன் துப்பறியும் வேலைக்குத் தயாராகத்-தூக்கத்தால் துவண்டிருப்பவனைப்போல இருந்தான்.

சிறிதுநேரம் கழித்து வாலிபனின் கரங்கள் மீண்டும் சந்திராவின் கன்னத்தைத் தொட்டன. சந்திரா விழித்தாள். விழித்தவள் குழந்தையைத் தட்டியபடி மறுபடியும் கண்களை மூடிக் கொண்டாள்.

குமரேசால் அங்கு உட்கார முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது.

எரிமலையாகிவிட்டான்]

வாலிபனின் கைகள் சந்திராவின் கன்னத்தை வருடின. சந்திரா விழித்துக் கொண்டாள். வாலிபன் நடுங்கியபடி கைகளை எடுத்துக் கொண்டான். சந்திரா விழித்த வேகத்தில் குழந்தையும் சிணுங்கியது. சந்திரா மேலே நிமிர்ந்து தன் கணவனைப் பார்த்தாள். அவன் தூங்கி வழிந்து கொண்டிருந்தான்.

அவனை ஒரு முடிவு கட்டுவதற்காக இமைகளின் இடுக்கில் ஒளிந்துகொண்டிருந்த அந்தப் பயங்கர விழிகளை அவள் பார்க்கவில்லை.

கணவனைப் பார்த்த கண்களோடு அந்த வாலிபனையும் பார்த்தாள். அவன் உமிழ்நீர் விழுங்கினான். சிணுங்கிடும் குழந்தைக்கு ஒருமுத்தம் கொடுத்துவிட்டு அதைத் தட்டிக் கொடுத்தபடி தூங்கிவிட்டாள்.

எத்தனையோ முறை, அழுதிடுங் குழந்தைக்கு அவள் முத்தமிட்டுப் பிறகு தூங்க வைப்பதைக் குமரேஸ் பார்த்து இருந்தாலுங்கூட, இந்த முத்தம் அவனை நெருப்பில் தள்ளி எண்ணெயை ஊற்றுவதாயிருந்தது.

பூகம்பமானது அவனது உள்ளம். பயங்கரமான ஒரு முடிவுடன் எழுந்தான். குழந்தையைக் கையில் தூக்கினான்; குழந்தை அழுதது. சந்திரா விழித்துப் பார்த்துத் தன் கணவன் கையில் குழந்தையைக் கண்டு — தூங்கத் துவங்கினாள் குழந்தையுடன் குமரேஸ் ஐந்தாறு பலகைகளைத் தாண்டி அப்பால் போனான்.

வாலிபனுக்கு மகிழ்ச்சி பெருக்கெடுத்தது.

இரயில்வண்டி புயல்வேகத்தில் பெருமூச்சுவிட்டு ஓடிக் கொண்டிருந்தது.

குமரேஸ் சுற்றும் முற்றும் பார்த்தான்; கையிலிருந்த குழந்தையை அந்த அந்தகாரமான இருளில் ஜன்னல் வழியே வீசியெறிந்தான்.

அந்தப் பசலை எந்தக் காட்டில் விழுந்ததோ?

எந்தப் பாறையில் விழுந்து சுக்குநூறானதோ?

குமரேசின் மனம் சிறிது சாந்தி பெற்றது. ஒரு விபசாரியின் தொடர்பு இன்றோடு ஒழிந்தது. என் பெயரைச் சொல்லி வருங்காலத்தை வீணாக்காமலிருக்கக் குழந்தையும் ஒழிந்தது. இனிமேல் நான் தனி ஆள். இந்தத் தாசி அவனோடு போகட்டும்!" என்று அவன் மனம் பேசிற்று. வண்டி நிற்கும் ஸ்டேஷனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அதற்குள் அவன் பார்வை முன் உட்கார்ந்திருந்த இடத்

கருணாநிதி

தில் பாய்ந்தது. வாலிபனின் கரங்கள் இப்போது நடுக்கமின்றிச் சந்திராவின் கன்னத்திடம் சென்றன. அடக்க முடியாத ஆவலுடன் அவள் கன்னக் கதுப்பை விரல்களால் அழுத்தினான். சந்திரா திடுக்கிட்டு விழித்தாள். அவன் இப்போது சிரித்தான்.

ஓ!"

என்ற பெரிய சப்தத்துடன்

சந்திரா துள்ளிக் கிளம்பினாள். வாலிபனின் கன்னத்தில் அவள் கரங்கள் மாறிமாறி விளையாடின. எல்லோரும் விழித்துக் கொண்டார்கள்.

குமரேசும் அருகே வந்துவிட்டான். அவனுக்கு மயக்கம் வருவது போலிருந்தது.

"அத்தான்!" என்று அவனைக் கட்டிக் கொண்டாள் சந்திரா.

'ஆரம்பத்திலிருந்து நீ பார்த்த பார்வை...' என்னவோ ஆத்திரமாகச் சொல்லப் போனான் குமரேஸ்.

"என் சிறு வயதில் இறந்து போன அண்ணன் மாதிரி இருந்தது... பார்த்தேன்...... இந்தப் பாவி........" என்று விம்மி விம்மியழுதாள். பெட்டியிலிருந்தவர்கள் அவனைத் திட்டித் தீர்த்தார்கள்.

கடலூர் ஸ்டேஷன் வந்தது.

அந்தச் சபலம் பிடித்த மைனர் இறங்கிப் போய் விட்டான்.

"இதற்காகவே இந்தப் பயல்கள் ரயிலில் ஏறுவது" என்று ஒரு குரல் கிளம்பிற்று.

திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியில் குழந்தையைக்கூட மறந்திருந்த சந்திரா, "குழந்தை எங்கே அத்தான்?' என்று ஆவலோடு கேட்டாள்.

"பக்கத்திலேதான் இருக்கிறது; இங்கேயே இறங்கு" என்றான் குமரேஸ். அவன் முகம் கறுத்துவிட்டது.

"ஏன்?" என்றாள் அவள்.

"இறங்கேன் சொல்லுகிறேன்!' என்று மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான் குமரேஸ். அவளும் இறங்கினாள். இறங்கியவுடன் கேட்டாள் — "எங்கே குழந்தை?" என்று.

கண்ணீர் வழிந்தோட அவன் சொன்ன பதில்:

"இரண்டு மைல்களுக்கு அப்பால் இருக்கிறது' என்பது தான்.

"ஏ'அவசரக்காரக் குமரேசா!"

'ஆத்திரக்கார முட்டாளே!"

என்ற ஒலி, நாலாபுறமிருந்தும் அவன் காதில் சாட்டை ஒலியாய் ஒலித்தது,

'இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ்' கடலூரிலிருந்து புறப்பட்டது.





# எட்டுத்திக்கிலும்..!

## மரண விளிம்பில் பூட்டோ!

'இந்தியாவோடு நூற்றாண்டுப் போர் நடத்துவேன்' என்று ஒரு காலத்தில் 'முழங்கிய'-பாகிஸ்தானின் முன்னாள் அதிபர் இன்று மரணத்தின் விளிம்பில் நிற்கிறார்.

ஜியாவுர் ரின் இன்றைய பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றம் பூட்டோவுக்குத் தூக்கு தண்டனை விதித்துள்ளது! தன்னுடைய அரசியல் எதிரியின் தகப்பனாரைக் கொலை செய்ததாக அவர்மீது போடப்பட்ட வழக்கின் தீர்ப்புதான்—தூக்கு! உச்சநீதிமன்றத்திற்குச் செல்வதற்காகவும், கருணை மனு விடுப்பதற்காகவும் பூட்டோவுக்கு ஒரு வார கால அவகாசம் தரப்பட்டுள்ளது!

சலுகைகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டு இப்போது பூட்டோ பாழடைந்த சிறையில் தனித்து அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை இரத்து செய்ய வேண்டுமெனப் பல தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

கடைசியாக வந்துள்ள தகவலின்படி மரணதண்டனையை எதிர்த்து உச்ச (சுப்ரீம்) நீதிமன்றத்தில் பூட்டோ வழக்காடப் போகிறார் என்று தெரிகிறது. தன்னைப் பாழும் சிறையில் அடைத்து வைத்திருப்பதை ஆட்சேபித்தும் அவர் வழக்காட போகிறார்.

இதற்கிடையே ஐக்கிய நாடுகளின் செயலாளரான வால்ட்ஹைம் பூட்டோவுக்கு மன்னிப்பளித்து அவரை விடுவிக்கும்படி ஜியாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பூட்டோவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது குறித்து இந்தியத் தலைமை அமைச்சர் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

## இளமையில் கிடைத்த உலக வெற்றி

மாயா சிபுர்டனிட்ஸ்-பதினறுவயதுள்ள பள்ளி மாணவி சோவியத் கூட்டாட்சி அமைப்பில் உள்ள ஜார்ஜியா குடியரசின் தலைநகரான பிலிசி நகரத்தைச் சார்ந்தவள்.

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பேட்கிசிஞ்சன் நகரத்தில் அண்மையில் நடந்த உலகப்பட்டத்துக்கான 'செஸ்' (சதுரங்க) விளையாட்டுப் போட்டியில் தலைசிறந்த ஆட்டக்காரரான அல்லா ருஷ்னிர் என்பவரோடு ஆடி வெற்றி கண்டார்.

சதுரங்க விளையாட்டில் 'உலக சாம்பியன்' என்ற பட்டத்தையும் மாணவி பெற்றுவிட்டார்!

## சிலுவையில் அறையப்பட்ட இளைஞர்கள்

சிலுவையில் அறையப்பட்டு இயேசு மாண்டதாகக் கூறப்படும் நாளை—கொண்டாடும் நாள் 'பெரிய வெள்ளி'

பிலிப்பைன்ஸிலுள்ள "சாண்ட்படரோ" என்ற சிற்றூரில் இவ்வாண்டு 'பெரிய வெள்ளி' அன்று இரண்டு

## ஜாகீர்

இளைஞர்கள் உயிருடன் சிலுவையில் அறையப்பட்டுள்ளார்கள்.

முப்பத்தைந்து வயதான ஜிவானி தோபயர்' இருபத்தெட்டு வயதான 'மரியானோ பக்டாஸ'— ஆகிய இந்த இரண்டு இளைஞர்களின் கைகளிலும் கால்களிலும் இரும்பு ஆணிகளால் அடித்துச்சிலுவை ஏற்றியதை ஆயிரக்கணக்கான மக்கள் வேடிக்கை பார்த்திருக்கிறார்கள்.

## 'மாஜி' தலைமை அமைச்சருக்கு நேர்ந்த கதி;

மோரோ. இத்தாலியின் முன்னாள் தலைமை அமைச்சராக இருந்தவர். இத்தாலியின் கிறித்துவ ஜனநாயகக் கட்சியின் தலைவராக இப்போது இருக்கும் அவர் மார்ச் பதினைந்தாம் தேதி காரில் சென்றுகொண்டிருந்தபோது பட்டப் பகலில்-துப்பாக்கி முனையில் சில கொரில்லாக்களால் கடத்தப்பட்டார்.

இத்தாலியின் அடுத்த குடியரசுத் தலைவராக ஆக இருந்தவருக்கு ஏற்பட்ட கதியைக் கண்டு நாடே அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

அவர் கடத்தப்பட்ட நேரத்தில் அவருக்குப் பாதுகாவலர்களாக வந்தவர்களுக்கும், கொரில்லாக்களுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஐந்து பாதுகாவலர்கள் உயிரிழந்தார்கள்.

முன்னாள் தலைமை அமைச்சரை கொரில்லாக்களிடமிருந்து மீட்க அரசு முழுமூச்சோடு செயல்பட்டு வருகிறது.

## தன்னாட்சி பெறும் "பாஸ்க்" இனமக்கள்

ஸ்பெயின் நாட்டின் வடபகுதியில் வாழும் பாஸ்க் இனமக்கள், பழங்குடியினர் ஆவார்கள்; மலைப் பகுதிகளில் இருக்கும் அவர்களுக்கென்று தனித்த மொழியும் கலாச்சாரமும் உண்டு.

1938-ஆம் ஆண்டு வரை தங்கள் மாநிலத்தில் தன்னாட்சி நடத்தி வந்த அம்மக்கள் ஸ்பெயினில் நடந்த உள்நாட்டுப் போரில் ஜெனரல் பிரான்சிஸ் பிராங்கோ என்ற சர்வாதிகாரியின் கை ஓங்கியதால் தங்கள் தன்னாட்சி அரசுரிமையை இழந்தார்கள். இருந்தபோதும் கடந்த நாற்பதாண்டு காலமாக இழந்துவிட்ட தன்னாட்சியை மீண்டும் பெற தொடர்ந்து போரிட்டே வந்துள்ளார்கள்.

சர்வாதிகாரி பிராங்கோவின் வீழ்ச்சிக்குப் பிறகு ஸ்பெயினின் தலைமை அமைச்சரானவர் 'அடொல்போ ஸ் கொயரெஸ் என்பவர். அவர் பாஸ்க் இனமக்களுக்குத் தன்னாட்சி வழங்க முடிவு செய்துள்ளார்.

## மாண்டவன் மீண்டான்!

இருபது வயதான சிவராஜ் என்ற இந்திய மாணவன் கலிபோர்னியாவில் இருக்கும் கல்லூரி ஒன்றில் படித்துக்கொண்டிருந்தான்.

அவன், தான் தங்கியிருந்த இடங்களிலெல்லாம் களவாடுவதை வாடிக்கையாகக் கொண்டான். காவலர்கள் அவனைப் பிடிக்க வலை வீசிய போது எப்படியோ தலைமறைவாகி விட்டான். சிறிது காலம் கழித்து, அவன் மாண்டிருப்பான் எனக் கருதிய காவலர் அவனைத் தேடுவதை நிறுத்தி விட்டார்கள்.

—ஆனால் இம்மாதம் இருபத்து நான்காம் தேதி அவன் பிடிபட்டு விட்டான். ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் தனது 'கைவரிசை'யைக் காட்டியிருந்த அவன் தனக்காக வேண்டி எதையும் திருடவில்லையாம்!

அரிய வாய்ப்பு, குறுகிய சந்தர்ப்பம்!

எங்களது தவணைமுறை
திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்!

**எம். கே. டிரேடர்ஸ்,**

41, ரங்கராஜபுரம் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-24.

—: கிளை :—

50, ஏரிக்கரைத் தெரு. மேற்கு மாம்பலம், சென்னை-33.

எங்களிடம் ரேடியோ, டிரான்சிஸ்டர், ஸ்டீல்பீரோ, சைக்கிள் சோபா, மின்விசிறி மற்றும் வீட்டுக்கு தேவையான எல்லா பொருட்களும் ரொக்கத்திற்கும் தவணை முறையிலும் கிடைக்கும்.

உரிமையாளர் :— O. Y. A. முகமது மைதீன்.

# வந்த மடல்

அன்பு கலைஞர் அவர்கட்கு-தங்களின் உடன்பிறப்பின் சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

'ஏப்ரல் திங்கள் முதல் வாரத்தில் இருந்து 'நம்நாடு'' பத்திரிகை 10 காசு அதிகமாக உயர்த்தியுள்ளோம்'' என அறிவித்திருந்தால் போதாதா? நாங்கள் வாங்க மாட்டோமா? எதற்காக ஒரு கடிதம் எழுதி நாங்கள் எண்ணுவதை எல்லாம் எழுதி எங்களைக் கண்ணீர்க் கடலில் விடவேண்டும்? தங்கள் கடிதம் கண்டு நாங்கள் அழவேண்டும் என்று தாங்கள் ஆசைப்பட்டால் அந்த ஆசைக்குக் குறுக்காக நிற்கமாட்டோம்.

காரணம் இல்லாமல் தங்களுக்கு 'உயிரை'யே தரத் தயாராயிருக்கும் எங்களிடத்தில் பத்துக் காசுக்காக (கொள்கைக்காக) ஒரு கண்ணீர்க் கடிதம் எழுதத் தேவையில்லை.

அன்பன்,
ஆ. இரா. எழில் வண்ணன்
117— வீரப்பிள்ளைத்தெரு,
பெங்களூர்—42

ஃ ஃ ஃ

அன்புள்ள ஐயா!

"இன்னும் அகலவில்லை தீண்டாமை இருள்'' என்னும் கட்டுரையில் இந்தியாவெங்கும் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் அவல நிலை இழிநிலையைப்படம் பிடித்துக் காட்டியுள்ளார் சித்தார்த்தன் அவர்கள். நெஞ்சம் குமுறுகிறது; கோடை வெயிலில் பரந்த பாறையின் மீது கால்களையும் கைகளையும் கட்டி ஒருமனிதனைப் படுக்க வைத்தால் எவ்வாறெல்லாம் துடிப்பானோ அதைப்போன்று உடலெல்லாம் வருந்தும் வாட்டுகிறது; கல் நெஞ்சர்களின் இழிச்செயலால்!

இலக்கியத் தென்றல். அரசியல் வித்தகா டாக்டர் கலைஞர் திராவிட இனத்தாருக்கு சம்பந்தியானது போல, இன்னும்பலர்கலப்புத திருமணங்களை ஆதரித்து, அறிவுரை வழங்கி நடைமுறையில் தங்களை வழி காட்டிகளாய் அமைத்துக் கொண்டால் ஒழிய 'இன்னும் அகலவில்லை தீண்டாமை இருள்'; என்னும் சித்தார்த்தரின் கூற்று நாளையும் தொடரும்! தாழ்த்தப் பட்டோருக்கு விடிவே கிடையாது'

கலைஞரின் 'சுமந்தவள்'போன்ற எண்ணற்ற கதைகளையும், கடிதங்களையும சித்தார்த்தன் போன்றோரின் கட்டுரைகளையும் சுமந்து வரும் 'நம்நாடு' தழைக்கட்டும்' தலை கொடுத்து வளர்ப்போம் கழகத்தை! வாழ்க கலைஞர்! வளர்க பெரியார், அண்ணா புகழ்.

அன்பன்,
கே. துரைசாமி
மட்ரப்பள்ளி,
வ. ஆ. மாவட்டம்

ஃ ஃ ஃ

அன்புடையீர் - வணக்கம்!

'நம் நாடு,' என்ற நமது கழக பொன் ஏட்டை கிழமை தவறாமல் வாசிக்கும் போது முக்கனிச் சாறோடு தேன் கலந்து பருகியதைப் போன்ற தித்திப்பு ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு பலாச் சுளை! இபபடிப்பட்ட இதழுக்கு அரை ரூபாய் என்ன, அறுபது காசு கூடக் கொடுக்கலாம்! இதற்காக நீங்கள் ஏன் நேரத்தைச் செலவு செய்து மடல் தீட்ட வேண்டும்?

கால் கட்டத்தின் வடிவில் ஒரு மூலையில் அறிவிப்பு விட்டிருந்தால் போதுமே.

என் போன்ற இளம் உள்ளங்களில் ஒரு குறை...... கேள்வி—பதில் பகுதி இல்லையே என்று......

"நீயும் நானும'' என்ற தலைப்பில் ஒரு பகுதி கேள்வி—பதிலாக இதழோடு சேர்ந்து வெளி வந்தால் இன்னும் சுவை கூடும். இதழுக்கும் சிறப்பிருக்கும். என் போன்ற 'நம் நாடு' வாசகர்களுக்கும் நன்மை பயக்கும். இந்த அன்பு வேண்டுகோளை ஏற்றுச் செயல்படுவீர்கள் என்று நம்புகிறேன்.

இவண்
ஜெயபிரகாஷ்,
8. ஆலந்தூர் சாலை
சைதை
சென்னை-15.

ஃ ஃ ஃ

அன்புடையீர்- வணக்கம்!

26—3—78 நம் நாடு இதழிலும் 27—3—78 முரசொலி இதழிலும் கலைஞர் அவர்கள் கடிதம் எழுதியதற்கு இம்மடல் எழுத நேரிடுகிறது.

உங்கள் கோரிக்கையை எந்நாளும் துரோக மனப்பான்மையற்ற உடன் பிறப்புகள் நிராகரித்ததுண்டா? ஐம்பது காசென்ன?

ஐமபது ரூபாயாக இருந்தாலும் நம் நாடு இதழையும் முரசொலி இதழையும் வாங்காமல் இருக்கப் போகிறோமா? எண்ணற்ற உடன் பிறப்புகளின் இதய தெய்வமாகிய தங்கள் கைபட்டு பேனாக் கோலம் ஆகும் எதையும் நாங்கள் வாங்கத் தயார்: இது உறுதி.

இப்படிக்கு
பி எஸ். எம் சாகுல் ஹமீது
அம்மாபேட்டை,
தஞ்சை,

('நம்நாடு' இதழின் விலை 10 காசு உயர்த்தப்பட்டதை வரவேற்று வாசகர்களிடமிருந்து வந்துள்ள நூற்றுக்கணக்கான கடிதங்களில் சிலவற்றை மட்டுமே இங்கு வெளியிட்டுள்ளோம். அனைத்துக் கடிதங்களையும் வெளியிட இயலாமைக்கு இடமின்மையே காரணம் என்பதை அனைவரும் உணருவார்கள் என நம்புகிறோம்.

பத்துக்காசு விலை உயர்வைப் பொருட்படுத்தாது தொடர்ந்து 'நம் நாடு' வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க முன்வந்துள்ள உடன் பிறப்புக்களுக்கு நன்றி.)

(ஆ-ர்)

# இந்தியத் தலைநகரில் ஒருநாள் இரவு....!

டில்லி - இந்தியாவின் தலைநகர். அன்றைய மன்னர்களின் கதைகளைக் கூறும்செங்கோட்டை, குதுப்மினார் போன்ற வானளாவிய பழமைச் சின்னங்களினூடே அனைத்து நாடுகளின் நாகரிக வெள்ளம் கலவையிட்டு ஓடும் உலகப் பெரு நகரங்களில் ஒன்று. புகழ் பெற்ற இந்நகரில் அவ்வப்போது நடக்கும் திகிலூட்டும் நிகழ்ச்சிகள் மர்மத் திரைப் படங்களில் வரும் காட்சிகளையும் மிஞ்சுபவைகளாக இருக்கின்றன.

குளிர்கால நாட்களில்பகற்பொழுதுகள் குறுகி, முன்னதாகவே இருட்திரை டில்லி மீது கவிழ்ந்துவிடுகிறது. இரவு எட்டு மணிக்கெல்லாம் தெருக்களில் காரிருள் சூழ்ந்து, மனிதர்களின் நடமாட்டம் குறைந்து விடுகிறது.

ஒருநாள் இரவு-

நௌபத்ராய் என்பவர் மேற்கு டில்லியிலிருக்கும் ரஜோரி கார்டனிலுள்ள தனது வீட்டை நோக்கி மோட்டார் சைக்கிளில் விரைந்து கொண்டிருந்தார். இன்னும் ஒன்பது மணிகூட ஆகவில்லை என்றபோதும் சாலைவெறிச்சோடிக் கிடந்தது,

ஒரு பியட்கார் சாலையின் குறுக்காக வந்து அவரின் மோட்டார் சைக்கிளைமறித்து நின்றது; நான்கு முரடர்கள் காரிலிருந்து இறங்கி வந்தார்கள், ஒருவன் கரத்தில் கைத்துப்பாக்கி இருந்தது. மற்ற மூன்று பேர்களின் கரங்களிலிருந்த பிச்சுவாக்கள் அந்த இருட்டிலும் பளபளவென்று மின்னின.

அவர்களின் தலைவன்போல் காணப்பட்ட - கரத்தில் துப்பாக்கி வைத்திருந்தவன் நௌரத் ராயைப் பார்த்து "உயிர்மேல் ஆசையிருந்தால் உன்னிடம் இருப்பதையெல்லாம் எங்களிடம் கொடுத்துவிட்டுப் பேசாமல் திரும்பிப் போ" என்று கட்டளையிட்டான்.

நல்ல வேளையாக, நௌபத்ராயிடம் முப்பதைந்து ரூபாய் இருந்தது. அப்பணத்தை அவர் ஒன்றும் பேசாமல் அவர்களிடம் கொடுத்தார்; திருப்தி அடையாத கொள்ளையர்கள் அவர் அணிந்திருந்த கைக்கடிகாரத்தையும், தங்க மோதிரத்தையும் உருவிக் கொண்டார்கள். பிறகு காரிலேறிச் சென்று இருளில் மறைந்தார்கள்-

அடுத்து, கொள்ளையர்கள் உப்தேஷ்குமார் என்பவரை மறித்து அவர் கையிலிருந்த சூட்கேசைப் பறித்துக்கொண்டார்கள். அதில் வியாபாரத் தொடர்பான சில பத்திரங்களும், கடிதங்களும் தான் இருந்தன.

காரிலேறித் தொடர்ந்து தங்கள் வேட்டையை நடத்தினார்கள் கொள்ளையர்கள் ஆட்டோ ரிக்ஷாவில் வந்துகொண்டிருந்தமொகிந்தர்சிங்கும் நிச்சாட்டா சிங்கும் இப்போது அவர்களிடம் மாட்டிக் கொண்டார்கள்.

கொள்ளையர்கள் ரொக்கமாகஇரண்டாயிரத்துஇருபது ரூபாயையும் தொள்ளாயிரத்து ஐம்பது ரூபாய்க்கான 'செக்'கையும் அவரிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்கள். அத்தோடு நிற்கவில்லை. ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநரின் அன்றைய வருமானம் அனைத்தையும் அவரிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்கள்.

அந்த வேட்டை வெற்றிகரமாக முடிந்த பிறகு, வேகமாக வந்து கொண்டிருந்தஒரு காரின்மீது கொள்ளையர்களின் பார்வை விழுந்தது. தங்கள் காரை, வந்த காரின்மீது லேசாக இடித்து அதை நிறுத்தச் செய்தார்கள்.

காரிலிருந்த கன்வார்பிர் சிங்கும் அவருடைய மனைவியும் தங்களிடமிருந்த நூற்று நாற்பது ரூபாய் இரண்டு தங்க வளையல்கள். ஒரு தங்க மோதிரம், கைக்கடிகாரம்—ஆகியவற்றை எதுவும்பேசாது கொள்ளையர்களிடம் கொடுத்தார்கள். இருள் மண்டிய வெறிச்சோடிப்போன ரஜிந்தர் நகர் பகுதியில் இது நடந்தது.

ஷிகர்பூர் என்ற பாலத்தின் மீது இப்போது கொள்ளையர்களின் கார் ஓடிக்கொண்டிருக்கிறது... அடுத்து அவர்களுடைய வேட்டைக்கு இரையாகப் போகிறவர்கள் யார்? இதோ ஒரு ஆட்டோ ரிக்ஷா எதிரே வந்துகொண்டிருக்கிறது— கொள்ளையர்களின் கார் அதை மறித்து நிற்கிறது.

கொள்ளையர்கள் தலைவன் துப்பாக்கி முனையில் மிரட்டுகிறான்.

"நிறுத்து! உம்...சீக்கிரம்... சீக்கிரம்... இருப்பதையெல்லாம் கொடுத்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் ஓடுங்கள்" என்று'

ஆட்டோவில் வந்த மூன்று பேர்களும், ஓட்டுநரும் தங்களிடமிருந்த பணத்தையெல்லாம் ஏறத்தாழ ஆயிரத்து முந்நூறு ரூபாய் —கொள்ளையர்களிடம் கொடுத்து விடுகிறார்கள். அவர்களுடைய கைக் கடிகாரங்களும் பறிக்கப்படுகின்றன.

கொள்ளையர்களின் கார் அடுத்த வேட்டையை எதிர்பார்த்து பட்டேல் நகர்ப் பக்கமாக விரைகிறது. எதிரேவரும் ஸ்கூட்டர் தடுத்து நிறுத்தப்படுகிறது; அதை ஓட்டி வந்தவரின் பெயர்,ஜோகிந்தர் சிங். பின்னால் அமர்ந்திருந்த பெண் — அவருடைய மனைவி அவரிடமிருந்த முப்பதுரூபாய் அவர் மனைவியின் கைகளில் தவழ்ந்த நான்கு தங்க வளையல்கள், காதுகளில் தொங்கி விளையாடிய தங்கவளையங்கள், விரலை அழகுபடுத்திய தங்க மோதிரம் அனைத்தையும் கொள்ளையர்கள் அபகரித்துக் கொள்கிறார்கள்.

இரவு நீண்டுகொண்டே போகிறது... கொள்ளையர்களின் வேட்டை முடிவதாகத் தெரியவில்லை... இருண்டசாலைகளில் வழுக்கிக்கொண்டு ஓடுகிறது அவர்களிடைய கார். அவர்களுடைய கண்கள்கழுகுகளைப் போல் கூர்ந்துவெளியே நோக்குகின்றன—

—இதோ யாரோ இருவர் வந்து கொண்டிருக்கிறார்களே அவர்களிடம் என்ன இருக்கப் போகிறது? ஏராளமான பணத்தோடு இவ்வாறு தனித்துவர அவர்களென்ன முட்டாள்களா? எதற்கும் சோதனையிட்டுப் பார்க்கலாமே—

கொள்ளையர்கள் அந்த இருவரையும் நிறுத்தி பைகளுக்குள் கையை விட்டுத்

**சித்தார்த்தன்**

துழாவுகிறார்கள்; என்ன ஆச்சரியம்! ஏறத்தாழ ஆறாயிரம் ரூபாயல்லவா அவர்களிடமிருக்கிறது' கொழுத்த வேட்டைதான்!

இராக்காலங்களில் டில்லி எடுக்கும் பயங்கர மாற்றுருவத்தை அறியாத—ஒரு வேளை அறிந்திருந்தும் அலட்சியம் செய்த — பிரேம்தத்தும் அவருடைய நண்பரான வினோத் குமாரும் இவ்வாறு கொள்ளையர்களிடம் ஆறாயிரம் ரூபாயைத் 'தாரை வார்த்து'விட்டு வெறுங்கையோடு வீடு திரும்பினார்கள்.

அதைத் தொடர்ந்து அடுத்தடுத்து நிகழ்த்திய இரண்டு வேட்டைகளும் அவ்வளவு சரியில்லை, துளசி என்பவரிடமிருந்து வெறும் இருபத்தாறு ரூபாயும், நோக்வாலிடமிருந்தும் அவருடைய நண்பரான சதீஷ் குமாரிடமிருந்தும் வெறும் நாற்பத்திரண்டு ரூபாய் மட்டுமே கிடைத்தன.

இன்றிரவு இத்தோடு வேட்டையை முடித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தார்கள் கொள்ளையர்கள்; அவர்களின் கார், இருண்ட டில்லியின் எண்ணற்ற சாலைகளில் ஒன்றில் விரைந்து சென்று மறைந்தது.

ஒரே இரவில் கொள்ளையர்கள் ஒன்பது முறைதான் வேட்டையாடி இருக்கிறார்கள்; ரூ. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பணம்-எட்டு கைக் கடிகாரங்கள்-பல நங்க நகைகள் வேட்டையின்போது கொள்ளையர்கள் ஈட்டியவைகள்!

டில்லியில் நடந்த இரவு வழிப்பறிகளிலேயே-இவ்வாண்டு ஜனவரித் திங்கள் இருபத்தொன்பதாம் தேதி இரவு நடந்த வழிப்பறிகள்தான் மிகப் 'பிரபலமான'வைகள்!

காவலதிகாரிகளும், ஆயுதம் தாங்கி இரும்புத் தொப்பி அணிந்திருந்த காவலர் படையும் டில்லி மாநகரையே அலசினார்கள்-கொள்ளையர்களைப் பிடிக்க!

மறுநாள் இரவும் வழிப்பறிகள் முதல் நாள் இரவைப் போலவே நகரின் பல பகுதிகளில் நடந்தன!

கொள்ளையர்கள் பயன்படுத்திய கார் ரஜோரி கார்டனில் சேதமடைந்துபோய் நின்றுகொண்டிருப்பதாகக் காவல் துறையினர் கூறினார்கள். ஆனால் கொள்ளையர் யாரும் அதில் இல்லை-

டில்லியின் ஐ. ஜி. ஜனவரி திங்கள் முப்பத்தொன்றாம் தேதி பத்திரிகையாளர்களைக் கூட்டி, "பத்துப்பேர்கள் அடங்கிய-வழிப்பறிக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில்-ஆறு பேர்களைப் பிடித்துவிட்டோம். அவர்கள் கொள்ளையடித்த பொருட்களையும் மீட்டு விட்டோம்!" என்று சொன்னார்.

பிடிபட்டவர்களின் பெயர்களையும் ஐ. ஜி. வெளியிட்டார். அந்த ஆறு பேர்களும் களவாடியதற்காகவும் கொள்ளையடித்ததற்காகவும் ஏற்கனவே பல தடவைகள் சிறைசென்றவர்கள்.

ஒரே நாளில் கொள்ளையர்களைக் காவலர்கள் பிடித்துவிட்டார்களே என்று எல்லோருமே மூக்கில் மேல் விரலை வைத்து ஆச்சர்யப் பட்டார்கள். பிறகுதான் திரைமறைவில் நடந்த ஒரு நாடகம் அம்பலத்திற்கு வந்தது! காவல் துறையினராவது...ஒரே நாளில் குற்றவாளிகளைப் பிடித்து விடுவதாவது...

'கொள்ளையர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருட்கள்' என்று கூறி, உரியவர்களிடம் காவல் துறையினர் கொடுத்தபோது, பறி கொடுத்தவர்கள் அவைகளைப் பார்த்து ஒன்றும் புரியாமல் விழித்தார்கள். காரணம்-அவர்கள் பறிகொடுத்த பொருள்கள் அவைகள் அல்லவே!

"இதோ உங்கள் நகை" என்று காவல்துறை அதிகாரி ஒருவரிடம் நகை ஒன்றை நீட்டினார்.

அவர் அதை வாங்கி இப்படியும் அப்படியும் புரட்டிப் பார்த்துவிட்டு, "இது என்னுடைய நகை இல்லையே..." என்று சொன்னார்.

கொள்ளையர்கள் அடையாளம் தெரியாமல் இருக்க நகைகளை 'அழித்து' வேறு மாதிரியாக உருவாக்கியிருக்கலாம் என்று காவல்துறையினர் 'சமாதானம்' சொன்னார்கள்.

அவர்கள் சொன்ன 'கதை' நம்பும்படியாக இல்லை; வேண்டுமானால், ஒரே நாளில், ஒரே ஒரு நகையை மட்டும் உருமாற்றலாம்...அதெப்படி எல்லா நகைகளையும் ஒரே நாளில் உரு மாற்ற முடியும்?

"எனக்கு இந்த நகை வேண்டாம். என்னுடைய நகைதான் வேண்டும்" என்று ஒருவர் பிடிவாதமாகக் கூறியபோது; ஒரு சப்-இன்ஸ்பெக்டர் "ஒழுங்காக இதை வாங்கிக் கொண்டு போ...பிறகு இதுவும் கிடைக்காது..." என்று உறுமினாராம்.

பிடிபட்டவர்கள் பழைய குற்றவாளிகள் என்றபோதும், இருபத்தொன்பதாம் தேதி—முப்பதாம் தேதிய இரவு

(10-ம் பக்கம் பார்க்க)

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முருக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமிசன்னதி
72. அழகர்கோவில் சாலை, 72 C டவுன்ஹால்ரோடு, மதுரை.

# 'அர்த்தநாரி' ஏட்டை அடையாளம் கண்டுகொள்வீர்!

- பாவலர் திருமாவளவன் -

ந்தக் கணக்கை வேண்டு மானாலும் துல்லியமாகச் சொல்லி விடலாம். ஆனால் அர்த்த நாரிகள் இந்தச் சமு தாயத்தில் எவ்வளவு பேர் என்பதை யாரும் கணக்கிட்டுச் சொல்ல முடியாது; அதற்குக் காரணம் யார் யார் அர்த்தநாரி என்பதைக் கண்டு பிடிக்க முடியாததுதான்!

மனித குலத்திலுள்ள இந்த அர்த்தநாரிகளை விடப் பத்திரிகைத் துறையில் உள்ள அர்த்தநாரிகளால் ஏற்படும் அனர்த்தங்கள் ஏராளம்! ஏராளம்!

மனிதனுய்ப் பிறந்துவிட்ட அர்த்தநாரியால் ஒரு பெண், அல்லது ஒரு குடும்பம்தான் பாழாகிறது. ஆனால் பத்திரிகை அர்த்தநாரியால் ஒரு சமுதாயமே அழிந்து கொண்டிருக்கிறது. அதை நாம் அடையாளம் கண்டுகொண்டு ஒதுக்காவிட்டால் நம் தமிழினத்தின் உணர்வழிய, நலம் குலைய நாமே காரணமாகி விடுவோம்.

அடையாளம் கண்டு கொள்ளுங்கள்! பத்திரிகையில் அர்த்தநாரி இனத்தைச் சேர்ந்தது கீழ்ப்பாக்கத்து 'குமுதம்' ஏடு.

ஒரு தமிழன் நடத்துகிறுனே என்று பெருமைப் பட்டோம்! ஆவலோடு வாங்கினோம் ஒரு காலத்தில்.

அதை அனுபவிக்கும்போது தான் தெரிகிறது அது 'அர்த்தநாரி' என்று.

அதன் ஒவ்வொரு செயலும் 'தான் அர்த்தநாரிதான்' என்று உறுதிப்படுத்தும்போது அந்தக் குமுதத்தைவாங்குகிற தமிழரை எண்ணி.பெண்ணைப் பெற்றவர்கள்போல் நாம் கவலைப்படுகிருேம்; கலங்குகிருேம்.

இப்பொழுதுகூட, 23-3-78-ஆம் இதழில் 'தபால் தலை விவகாரம்' என்று ஒரு தலையங்கம் தீட்டித் தன்னை யாரென்று காட்டிக் கொண்டிருக்கிறது குமுதம்.

'தமிழ்த் தலைவருக்குத் தபால் தலை வெளியிட வேண்டும் என்பதில் எவ்வளவு அக்கறை பார்த்தாயா குமுதத்திற்கு! பெரியார் தபால் தலை வெளியிட மறு பரிசிலனை செய்யப்படுவதற்குக் கண்டனம்தெரிவித்திருக்கிறது' என்றுதான் தலையங்கத்தை மேலோட்டமாகப் படிப்பவர்கள் யாரும் நினைப்பார்கள்.

ஆழ்ந்து படித்தால் 'பெரியார்க்குத் தபால் தலை வெளியிடுவதில் தனக்கு எவ்வளவு வெறுப்பு என்பதைஅது கக்கியிருப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

'அறிவிப்பே வராதிருந்தால் கவலையே இல்லையாம்' அது சொல்கிறது

பெரியாருக்குப் பெருமை வரவேண்டும் என்பதில் அதற்கென்ன கவலை இருக்க முடியும்!மக்களாட்சியைக்கவிழ்த்த இந்திராவைப் போன்ற சர்வாதிகாரிக்கு;சுயநலமிகளுக்கு வால் பிடிக்கும்குமுதத்திற்குப் பகுத்தறிவுப் பகலவனும் பெரியாரின் மேல் பற்ருே பாசமோ இருந்தால்தான் நாம் வியப்படைய வேண்டும்.

ஆகவே குமுதம் பெரியாரைப்பற்றி, அவர் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கத்தைப்பற்றிக் கவலைப்படாததைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

ஆனால் அது சொல்கிறதே முரண்பாடுகள் கொண்ட மனிதரென்று' அதைப்பற்றி நாம் சில சொல்ல வேண்டியது அவசியமாகிறது.

பெரியார் முரண்பாடானவர் என்பதற்கு அது சொல்லும் காரணம். அவர் குடியை ஆதரித்தார், (2) பிள்ளையார் சிலையைப் போட்டு உடைத்தார். இராமாயணத்தை எரித்தார். (3) சமூகத்தின் ஒரு பகுதியினர் மீது வெறுப்பைத் தூண்டிவிட்டார். பிரிட்டிஷ் ஆட்சியை மறைமுகமாக ஆதரித்தார். (5)தமிழைக்காண்டுமிராண்டி பாஷை என்று தூற்றினர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களைத் தேடிப் பிடிக்க என்ன பாடு பட்டதோ குமுதம். சர்க்காரியா கமிஷனைவிடப் பெரிய கமிஷனுக ஏதாவது ஒன்றை அமைத்துதான் இந்த உண்மைகளைக் கண்டுபிடித்திருக்க வேண்டும்.

காந்தியாரின் ஒரே சொல்லிற்காகத் தன்னிடமிருந்த மிகப் பெரிய தென்னந்தோப்பையே அழித்து. மதுவிலக்குக் கொள்கையை முதலில் செயல்படுத்திக் காட்டியவரை பார்த்துத்தான் குமுதம் சொல்கிறது 'கள் குடியை ஆதரித்தார்' என்று.

இந்தக் குமுதத்தைக் கேட்கிருேம், 1937 ஆம் ஆண்டில், முதலமைச்சராய் பொறுப் பேற்றுக் கொண்டவுடனேயே சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கை அமுல் செய்த 'இராஜாஜி', முத்தையா (முதலியார்) நீதிக் கட்சியின் ஆட்சியில் கலால் இலாக்காப் பொறுப்பை வகித்தபோது மதுவை அடியோடு ஒழிக்க மாவட்டவாரியாகமதுவிலக்கு குழு அமைத்த போது அதைக் கடுமையாக எதிர்த்தாரே அது முரண்பாடில்லையா?

மதுவிலக்குப் பிரச்சாரம் அவசியமற்றது என்று சத்திய மூர்த்தி ஊர் ஊராய்ச்சென்று பிரச்சாரம் செய்யவில்லையா?

அவர்களெல்லாம் முரண் பாடற்றவர்கள்! பெரியார் தான் முரண்பாடானவரா?

கடவுள் அவதாரத்தின் கதை என்னும் பேரால் காமக் களஞ்சியமாகத் திகழும் இராமாயணத்தைப் பெரியார் கொளுத்த வேண்டும் என்று கூறியது தவறு; மேட்டுக் குடியினருக்குத் தமிழன் அடிமை என்று நூல் எழுதப்பட்டிருப்பதை எதிர்ப்பது தவறு; ஒரு சமுதாயத்தை ஒரு சிறுபான்மை இனம் அடிமைப் படுத்தி சுரண்டுவது கூடாது என்பது தவறு; இதைச்சொன்னல். செய்தால் பெரியார் முரண்பாடானவர்.

ஆனல்'இராமலீலா'நடத்தி இராவணனுக்குக் கொடும் பாவி கட்டிக் கொளுத்துபவர்கள் நேர்மையானவர்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில் சேரமாதேவியில் வ. வே. சுப்ரமணிய அய்யர், தாம் நடத்தி வந்த குருகுலத்தில் பார்ப்பன பிள்ளைகள் உண வருந்தத் தனி இடமும். மற்றவர்கள் உணவருந்தத் தனி இடமும் ஒதுக்கியது ஒரு வகுப்பாரின் மேல் வெறுப்பைக் காட்டியது இல்லையா?

இந்தச் செய்தியைப்பற்றிப் பெரியாரும், இராமநாதனும் காந்தியாரிடத்தில் கூறி நீதி வழங்கும்படிக் கேட்டபோது, தீண்டாமையை ஒழிக்க அயராது உழைத்த காந்தியார் 'யாரையும் கட்டாயப்படுத்த முடியாது' என்று கூறி விட்டாரே அது முரண்பாடு கிடையாதா?

1929-ஆம் ஆண்டு பிப்ரவரி 2-ஆம் நாள் தேவதாசி ஒழிப்பு மசோதாவை, நீதிக் கட்சி அமைச்சரவை இருந்தபோது, தாக்கல் செய்ததை எதிர்த்து சத்திய மூர்த்தி என்னென்ன பேசினர்?

'தாசி குலத்தை ஒழித்து விட்டால் அது மொத்த சமுதாயத்தையே கெடுத்துவிடும். தாசிகள் இல்லை யென்றல் குடும்பப் பெண்கள் கெட்டுவிடுவார்கள். இது ஆண்டவன் கட்டளையை மீறும் அடாத செயலாகும். என் உயிர்போனுலும் இந்தமசோதாவை நிறைவேற்ற விடமாட்டேன்'என்று சட்ட சபையில் ஆவேசத்துடன் பேசினுரே அது ஒரு வகுப்பைத் தாழ்த்தும் நிலையாகாதா?

இதை, இதைச் செய்யும் ஓர் இனத்தை எதிர்த்தால் அது சமூகத்தின் ஒரு பகுதியினர் மேல் வெறுப்பைத் தூண்டி விட்ட செயலா?

ஒரு காலத்தில் தென்னிந்தியாவில் காங்கிரஸ் என்றுல் பெரியார்தான். அவரைப் பார்த்துத்தான் குமுதம் சொல்கிறது, பெரியார் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு மறைமுகமாக வால் பிடித்தார்'என்று.

காங்கிரஸ் துவக்க காலத்தில் மகாநாடு நடத்தும்போது பிரிட்டிஷ் 'அரசுக்கு' விசுவாச பிரமாணம்'எடுத்துக்கொண்டு ஆரம்பிக்கவில்லையா?

ஹோம் ரூல் இயக்கத்தை ஏற்படுத்திய அன்னிபெசன்ட் அம்மையார் 1905 ஆம் ஆண்டு வாக்கில் சுயராஜ்ஜியத்திற்கு எதிர்ப்பாகப் பிரச்சாரம் செய்து இமயம் முதல் குமரி வரை, வங்காளம் முதல் கத்தியவார் வரை நமக்கு ஒரு இந்திய நேஷன் வேண்டும். அப்படிப்பட்ட நேஷன் இந்தியாவில் ஒரு போதும் உருவாக முடியாது! அது மட்டுமல்ல, ஆங்கிலேயர் ஆட்சியே நேர்மையான ஆட்சி, சிறப்பான ஆட்சி என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்' என்று பேசவில்லையா? இது ஆங்கிலேயர்க்கு வால் பிடிப்பதில்லையா?

குமுதத்திற்கு இதெல்லாம் தெரியாததல்ல, மக்கள்மறந்து விட்டிருப்பார்கள் என்ற நினைப்பு,

ஜனதா மத்தியில் இருப்பதால்தான், இந்தக் கண்டனத் தலையங்கம் கூட இது எழுதியது. இதுவே இந்திராவின் ஆட்சி அங்கு நடந்துகொண்டிருந்தால், தக்க சமயத்தில் எழுப்பிய சரியான குரல்' என்று பெரியார் தபால் தலை வெளியிட எதிர்த்த குரலைப் பாராட்டித் தலையங்கம் தீட்டியிருக்கும்.

இப்படிப்பட்ட அர்த்தநாரிக் குமுதம்' தான் பார்க்கிற ஆண்களை யெல்லாம் அர்த்தநாரிகள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. வாலி முந்த நரியின் வாயளப்பு இனியும் தமிழகத்தில் எடுபடாது என்பதை இனியாகிலும் இது புரிந்து கொள்வது அதற்கு நல்லது. இல்லையேல் வாய்க் கொழுப்பால் வரும் விளைவை அது அனுபவிக்கத்தான் வேண்டும்.

---

(9-ம் பக்க தொடர்ச்சி)

ளில் 'வழிப்பறிகள்' நடத்திய கொள்ளையர்கள் அவர்களாக இருக்க முடியாது என்றும், மீட்கப்பட்டதாகச் சொல்லப்படும் பொருட்கள் உண்மையில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களாக இருக்கமுடியாது என்றும் சில மூத்த காவல்துறை அதிகாரிகள் சந்தேகிக்கிருர்கள்.

அப்படியென்றல் —

இந்தப்பொருட்கள் யாரிடமிருந்து வரவழைக்கப்பட்டன? 'இவைகள்தான் மீட்கப்பட்ட பொருட்கள்' என்று சொல்வது எதற்காக? உண்மையான கொள்ளையர்கள் யார்? அவர்களைக் காப்பாற்றுவதற்காக நடத்தப்பட்ட நாடகத்தில் பங்கேற்பவர்கள் யார்?

—கேள்விகள் ஒன்றல்ல... இரண்டல்ல ...... இவைகளுக் கெல்லாம் என்று பதில் கிடைக்கும்?

இன்னெரு திடுக்கிடும் உண்மையும் வெளிவந்துள்ளது

நெடுங்காலமாகவே டில்லியில் பணியாற்றும் (!) சில சப் — இன்ஸ்பெக்டர்களும். உதவி சப் - இன்ஸ்பெக்டர்களும் பல கொள்ளைக் கூட்டத்தாரோடு இரகசியமாகத் தொடர்பு கொண்டு வருகிருர்களாம். கொள்ளைகளையும், வழிப்பறிகளையும் 'கண்டும் காணுமல்' இருந்து விடுவதற்காகக் கொள்ளையர்கள் அந்த அதிகாரிகளை அவ்வப்போது பணத்தால் குளிப்பாட்டுகிருர்களாம். டில்லி வட்டாரங்களில், ஒரு ஐ.ஜி.-க்கும் மேற்பட்ட செல்வாக்கோடு அந்த அதிகாரிகள் 'கோலேச்சு' வதாகச் சொல்லப்படுகிறது. பெரிய பெரிய அதிகாரிகள் வெவ்வேறு ஊர்களுக்கு வேலை மாற்றம் செய்யப்பட்டாலும், அந்தச் 'சிலர்' மட்டும் டில்லி வட்டாரத்திலேயே 'பணி (!) ஆற்றி வருகிருர்களாம்!

புலனாய்வுத் துறையினரின் கவனம் அவர்கள் பக்கம் திரும்பியுள்ளது! — பாவம், டில்லிவாழ் மக்கள்! போதிய பாதுகாப்பின்றி அச்சத்திலேயே நாட்களை ஓட்டிக் கொண்டிருக்கிருர்கள்.

கொள்ளையர்கள் வெளியே திரிந்தால்தான் ஆபத்து, சிறைக்குள் அவர்கள் அடைக்கப்பட்டுவிட்டால் அச்சமேதுமில்லை என்று அவர்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட முடியாது.

ஏழாண்டுச் சிறைவாசம், பத்தாண்டுச் சிறைவாசம் ஆயுட்காலச் சிறைவாசம் — போன்ற தண்டனைகள்பெறும் கொள்ளையர்கள் வெகு எளிதில், பெயிலில் (Bail) வெளியே வந்துவிடமுடியும்.

எடுத்துக்காட்டாக, கடந்த ஆண்டு பிடிபட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்ட நாற்பத்தொன்பது கொள்ளையர்கள் இவ்வாண்டு பெயிலில் வெளியே வந்துவிட்டார்கள். இவ்வாது வெளியில் வரும் கொள்ளையர்கள் தொடர்ந்து கொள்ளையடிப்பதோடு பழிவாங்கும் நடவடிக்கைகளிலும் இறங்கி விடுகிருர்களாம்.

# மக்களாட்சியும்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சில தேவைகள், அறிவியல், அறநெறி, மதம் கலை தொழி லியல், சட்டங்கள் ஆகியவற் றின் இயல்பினுல் புதிய வடி வங்களில் தோற்றமளிக்கின் றன. மொத்த உருவத்தில் ஒரு மாறுதல் உண்டாவதைக் காண்கிறோம்.

"மன இயல்புகளைக் கொண்டே சமுதாய அரசியல் நிகழ்ச்சிகளை விளக்கப் பார்ப் பதும், நிகழ்ச்சிகள் எப்படி அமைய வேண்டும் என்பதைப் பற்றித் திட்டங்கள் போடு வதும் ஒரு வீண் முயற்சி" என்று ஜான் டூயி என்ற அறி ஞர் கூறுகிருர். இருப்பினும் சிலர் இதைப் புரிந்து கொள்ள மறுப்பது, ஏதாவது ஒரு வகுப் பினர், அல்லது கட்சியினர் வேறு மறைமுகமான கார ணங்களைக் கொண்டு ஆதரிக் கும் திட்டங்களை தந்திரமான முறையினுல் திணிக்கும்பொரு ட்டு கையாளலாம். இதை யெல்லாம் மனதில் கொண்டு தான் பேரறிஞர் அண்ணு அவர்கள் தமக்கே உரிய பாணி யில் சொன்னுர்: "சிக்கலான பிரச்சினைகள். அய்யப்பாடுகள், மனக் குழப்பங்கள் மனக் குமுறல்கள் ஏற்படும் போது, எது முறை? எதனை எவ்விதம் செய்திடலாம்? என்பதுபற்றிக் கலந்து பேசிடவும், தக்க கருத்து பெற்றிடவும், தன்னல மற்று, அறிவுத் தெளிவுடன் யோசனை கூறிடத் தக்கவர் களைப் பெற்றிடவும் முடியாது போய்விடும்போது, பொறுப் புக்களை மேற்கொண்டு விட் டுள்ளவர்களின் தவிப்பும் தத் தளிப்பும் எவ்விதம் இருக்கும் என்பதனை விளக்கிவிட முடியாது. அத்தகைய தெளிவும் துணிவும் பொறுப் பும் பொறுமையும் மிகுதியாக இருக்க வேண்டும். தன் சொந்தக் கருத்தைத் திணிக்க வேண்டும் என்ற நினைப்பு எழலாகாது. பிரச்சினையை எந்தவிதமான விருப்பு வெறுப் புகளுடனும் பிணைத்துவிட லாகாது

தவருன கருத்தைத் தந்திர மாகப் புகுத்தும் முயற்சியை மேற்கொள்ளக்கூடாது. என் யோசனைதான்! எனது திட்டம் தான் என்ற எக்களிப்பைக் கொட்டிக் காட்டக்கூடாது.

கேட்பவர் கருத்தற்றவர், அறிவுப் பஞ்சத்தால் நம்மை வந்து நாடுகிருர் என்ற தப்புக் கணக்குப் போடக்கூடாது.

பிரச்னையை அணுகும் போது, தனது நிலையை அளவு கோலாக்கிக் கொள்ளாமல், பொறுப்பினை மேற்கொண் டுள்ளவரின் நிலையினை அளவு கோலாகக் கொள்ள வேண் டும். கேட்பவர் மனம் மகிழ வேண்டும் என்பதற்காகத் தித்திப்புக் கூட்டக்கூடாது; பிரச்சினையை விட்டு விடட் டும் என்பதற்காகக் கசப்பினை யும் கலக்கக் கூடாது.

இவ்வளவு இலக்கணமும் பொருந்தியுள்ளவர்கள் கிடைத்தால் மட்டுமே, பொறுப்பினை மேற்கொள்ப வர்கள், தங்கள் மனதிலே எழும் அய்யப்பாடுகளை நீக்கிக் கொள்ள, சிக்கல்களைப் போக் கிக் கொள்ள, வழிகாண்பர்."

இதிலிருந்து கிடைக்கும் படிப்பினை, போட்டி மனப் பான்மையைப் பயன்படுத்திப் போர் முதலிய தீமைகளுக்கும் சமூக முன்னேற்றம் முதலிய நன்மைகளுக்கும் மக்களை ஊக்க முடியும் என்பதே யாகும். சமுதாயத்தில் ஆத்ம கௌரவம், குடும்ப கௌர வம் குலகௌரவம் ஆகிய வற்றில் மனிதன் இன்னும் சிக்குண்டுள்ளான். குறிப் பாக ஒருவன் கூச்சத்தினுலோ, பயத்தினுலோ செயலில் இறங்குவானுயின், அந்தச் செயலின் விளைவுகளைப்பற்றி நிச்சயமாக ஒன்றும் சொல் வதற்கில்லை. அந்தக் கூச் சமோ பயமோ கோழைத் தனத்தின் காரணமாகவும் இருக்கலாம்; அல்லது, விவே கம், முன்னெச்சரிக்கை தீர்க்க தரிசனம் ஆகியவற்றின் கார ணமாகவுமிருக்கலாம். இந்த விவேகமும், முன்னெச்சரிக் கையும், பெரியோர்களிடமி ருந்து தோன்றுமாயின், அது மிகவும், பெரிதும் போற்றி பாராட்டப்படுகிறது.

அதனுலன்றே தமிழ் முனி வர் திருவள்ளுவர்

"...பயனுடையார்

பண்பு பாராட்டும் உலகு" என்றும்

"பண்புடையார்ப்

பட்டுண்டு உலகம்"

என்றும் கூறினுர்.

அறிவிற் சிறந்தவர்கள் மக் களை வழிகாட்டி நடத்திச் செலுத்தும் கடமையைக் கைவிட்டு விலகி நின்று தங் களை ஒரு தனி வகுப்பாக உரு வாக்கிக் கொள்வார்களே யானுல் அதைக் காட்டிலும் கேடானது இந்தியாவுக்கு வேறொன்று இருக்க முடி யாது.

எது நேருமோ எது நேராதோ என்பது ஒரு புறமிருக்க, விவேகம் ஆணை யிடக் கூடியதென்ன? மனித இயல்பை, அதாவது இந்திய மக்களின் இயல்பை புறக்க கணித்து விட்டு நாம் மேலும் முன்னேற்றமடைய முடியு மென்றே; நாகரிக உலகில் இந் தியாவை நிலைநிறுத்தி வைக்க முடியுமென்றோ நம்ப முடி யுமா? அரசியலில் மனித இயல் பைப் புறக்கணித்துவிட்டு நாம் வாழ்க்கை நடத்த முடி யும் என்ற கோட்பாட்டை அறிவியல் இன்னும் வகுக்க வில்லை. காந்தீயத்தைப் பின் பற்றி இந்தியா செல்கிறது என்று நாம் சொல்வது உண் மையானுல், மக்கள் மன இயல் புடன் இசைந்து ஒன்றிய ஸ்தாபனமாக இந்திய அர சாங்கம் அமைய வேண்டும், உண்மையான ஜனநாயக அர சியல் திகழ வேண்டுமானுல் எல்லாவிதமான அரசியல் கோட்பாடுகளும் பார பட்சமின்றி சமமாகப் பாராட் டப் படுதல் வேண்டும். அவசி யமற்றவை என்று கருதப்படு பவைகளைப் புறக்கணிக்கப் புகுவது அபாயமானதாகும். பேராசிரியர் டாயின் பீ இது பற்றிக் கூறுவதும் விளக்க மளிப்பதும் நமக்கு முற்றிலும் பொருந்தும் "வெங்காயத்தின் தோல்களை ஒவ்வொன்ருக நீக்கிக் கொண்டே போகும் போது தோல்களை மட்டுமே யன்றி அதன் உட்கருவையுமே களைந்தெறிந்துவிட்டோமென் பதை இறுதியில் அறிகிறோம். ஒரு சித்திரத்தை தூய்மைப் படுத்த நினைத்து முனைந்து அதன் வார்னிஷைப் பூச்சுப் பூச்சாக அழித்துவிட்டு அதன் வர்ணப்படங்களை ஒவ் வொன்ருக நீக்கிக்கொண்டே வருவோமாயின், அந்தச் சித் திரவரைவுக்கு ஆதாரமாய் அமைந்திருந்த 'கான்வாஸ்' துணி மட்டுமே எஞ்சி நிற்ப தைக் கண்டு துணுக்குறு கிறோம்"

ஆதலின் மக்களின், கட்சிக ளின் மாறுபட்ட மன இயல்பு கள் விருப்பங்கள் சமரசப் பட வேண்டுமாயின் அவற்றைத் தடையின்றி வெளியிட வாய்ப் பளிக்க வேண்டும். ★

# யாராலும் வீழ்த்த முடியாது!

இருண்டு கிடந்த தமிழகத்தில் ஒளிக்கதிராய்த் தோன்றிய தந்தை பெரியாரின் வாழ்க்கைத் துணைவியாகவும், அவரது பொது வாழ்க்கைக்குத் துணையாகவும் இருந்த மணியம்மையார் நம்மையெல்லாம் ஏங்க வைத்து விட்டு மறைந்துவிட்டார்.

சமுதாயத்தைத் திருத்தப் பெரியார் தந்த மருந்து கசப்பா னது தான். அதே கசப்பு மருந்தை, அண்ணு தேனில் குழைத் துக் கொடுத்தார்.

அந்தக் கொள்கைகளைப் பாலடையில் வைத்துப் புகட் டிய அன்னை மணியம்மையாரும் இப்போது இல்லை. இப் போது இந்தச் சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் இருளை நீக்க இந்த மேடையில் அமர்ந்திருக்கும் நாம் அனைவரும் பொறுப் பேற்றுக்கொள்ளவேண்டும்.

பேராசிரியர் எடுத்துச் சொன்னது போல திராவிடர் இயக்கம் என்பது அறுபது ஆண்டுகளல்ல, அதற்கு முன்பே ஊன்றப்பட்ட விதை, இப்போது பெரிய ஆலமரம் விழுது விட்டுப் பல கிளைகளாகத் தழைத்து இருக்கிறது.

அந்தக் கிளைகளை யாரேனும் வெட்டிவிட்டாலும், அதன் ஆணிவேரை யாராலும் அகற்ற முடியாது.

— கலைஞர்

(கடற்கரைக் கூட்டப் பேச்சு)

இந்திராகாந்தி மிகவும் கர்வம் பிடித்தவர் மட்டுமல்ல; முழு முட்டா ளுங்கூட!

—குவாலியரின் முன்னுள் மகாராணி

விஜயராஜே சிந்தியா.

(உமா வாசுதேவ் எழுதிய இந்திராவின் இரண்டு முகங்கள் என்ற புத்தகத்திலிருந்து)


உதயசூரியன் மோதிரம்





1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பல்லாயிரக் கணக்கான இயக்கத் தோழர்களின் கரங்களில் ஒளிபொழிந்த உதய சூரியன் மோதிரத்தை பேரறிஞர் அண்ணாவும் தமிழகத் தலைவர் கலைஞரும் கண்டு பூரிப்பு அடைந்தார்கள். மீண்டும் அந்தவெற்றிச் சின்னம் உதய சூரியன் மோதிரத்தை முழுதும் பஞ்சலோகத்தால் தயாரித்து வாழ்க கலைஞர் என்று பொறித்து தருகிறோம். ஒரு மோதிரம் விலை ரூ. 15.00 தபால் செலவு 3-50 தனி. உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து ரூ. 3.00 அட்வான்சுடன் அனுப்பி ன் மீதித் தொகைக்கு மோதிரத்தை V.P.P. மூலம் அனுப்புகிறோம்.

சக்தி ஜி. சம்பந்தன்
42, பள்ளிக் கூடம் தெரு,
பட்டாபிராம், சென்னை-600072

போட்டோ வினஸ்,
104, C. N. K. ரோட் - சென்னை-5
CINEMA SLIDE, OUTDOOR FLASH PHOTOS ETC.

விற்பனையாகிறது!

திருவையாறு பாவலர் மன்றத்தின் மூன்ருவது வெளியீடு!

புலவர் பொன்னியின் செல்வன் பாவலர் மெய்யடியான் இருவரும் தொகுத்து வழங்கிடும்

'நெஞ்சத்தில் அண்ணு'

பாத் தொகுப்பு

∴ அண்ணனின் உருவம் தாங்கிய இருவண்ண முகப்பு விலை ரூ. 4

∴ அண்ணனின் புகழுக்கு அணி சேர்க்கும் வண்ணமலர்ச் சோலை

∴ தமிழக முன்னணிப் பாவலர்களின் கற்கண்டுக் கவிதைகள்

∴ பாவலர்கள் கையில் இருக்கவேண்டிய கருத்துக் கருவூலம்,

முன்பணம் அனுப்புவோர்க்கு கவர்ச்சிகர கழிவு உண்டு.

தொடர்புக்கு:

பாவலர் மெய்யடியான்

பொருளர், பாவலர் மன்றம், தஞ்சை மாவட்டம்

அந்தணக்குறிச்சி திருவையாறு—613204

# An appeal for the JAIL BIRDS

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

BY **Dr. M. KARUNANIDHI**

Beloved Brother,

The Union Home Minister's announcement in both Houses of Parliament that not only the much hated MISA would be repealed unconditionally but also the Janatha Government's proposal to bring about a Preventive Detention Bill to replace MISA would be dropped is an auspicious tidings to be welcomed and hailed by one and all.

Even at the time the move to replace MISA with a new Preventive Detention was mooted in Janatha Government quarters, the Kazhagam did not fail to express its disapproval in all its vehemence.

Three months ago, while participating in Rajaji's Birthday celebration at Mangollai, Mylapore, in the presence of several top leaders of Tamil Nadu Janatha Party, I unequivocally declared: "The Kazhagam will never accept Preventive Detention in any garb in the place of MISA. The Central Government should give this matter serious reconsideration and drop such proposal altogether."

As a party which strived hard to restore democracy, the Janatha Party always deserves all regards and praises from the Kazhagam. But, at the same time, we have shown in practice that the Kazhagam will never hesitate to express its opposition in strongest terms, if the legislation that are enacted, the plans that are drawn and the policies that are formulated during the Janatha regime, in any way go Counter to the democaticratic rights of the public and form a stumbling block in establishing the progressive socialistic society.

Even when the news trickled out that the Centre was thinking on the lines of making the Preventive Detention a permanent part of the Criminal Procedure Code, the Marxist Communist Party leaders vociferously criticised the move. As such, the Home Minister deserves all he kudos for giving up the Preventive Detention Bill in response to the strong public opinion.

The existing laws and the Courts, which award judgement on the basis of these laws, are more than enough to deal with all the grave offenders, whether they are violence — mongers or anti-socials! If the law and justice are to perform their stipulated duties properly, an impeccable uprightness is required on the part of the persons, who are vested with the responsibility of operating them. If a Government thought of using the MISA and Preventive Detention on the pretext that there may arise some difficulties without them, then those laws will also began to operate only in accordance with the whims and fancies of the persons who are at the helm of affairs of the Government.

Can we forget the dreadful experience when the MISA, which was introduced as a measure to oppress the smugglers, hoarders and anti-social elements, took pleasure in putting behind the bars the politicians numbering 1,60,000 for more than a year without any trial?

Similarly, serious apprehension gripped everyone that the Preventive Detention, will assume indiscriminate proportion and be used to persecute political opponents. This fear has now been removed.

When the Home Minister made the announcement in the Rajya Sabha, the CPI leader Mr. Bupesh Gupta, had made an appeal to the Minister thus: "Even now there are several political prisoners suffering in detention in some States. Important among them are the Nexalites. I request the Home Minister to intervene to get them released."

In Tamil Nadu Assembly too, all the opposition members without exception, including DMK, have spoken elaborately on the demand to release the Naxalite prisoners. The Naxalites might have in the past founded their political doctrine on the basis of their belief that their principles can be spread through murder and the best remedy for the murder is murder itself. But now they have changed their views considerably and have come around the idea of accepting the parliamentary democracy.


Very recently the Marxist leaders declared in the State Assembly that they had to expel the Naxalites from their movement because they could not reconcile with the idea of a party having violence on its plank. But even those leaders, recognising the visible changes in the attitude of the Naxalites, have demanded their release.

Therefore, it is our fervent appeal that not only the Central Government but the State Governments also should consider this issue and expedite the release of all the remaining political prisoners!

It is also my duty to point out at this juncture that during the Kazhagam regime, the death sentence imposed on the Naxalite leader Kaliaperumal was commuted to life imprisonment.

As there is significant change in their way of thinking since then, the State Government should approach this issue with a humanitarian consideration and come forward to do the needful in this respect.

Apart from the issue of these political prisoners, it would also be befitting to the Central Government if it takes an appropriate decision in the matter of other convicts, condemned to death or transportation for life, to commemorate the Centenary of the elder Statesman Rajaji.




★★★★★-★★★★★★

## 'நம் நாடு' விற்பனையாளர்கள் கவனிக்க

'நம் நாடு' விற்பனையாளர் அனைவருக்கும் பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது பட்டியல் தொகையை 8-ந் தேதிக்குள் எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும், தொகையை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்.

— நிர்வாகி —
'நம் நாடு'

★★★★★-★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம் சென்னை 600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009